
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5	இதழ்: 02	ஜூலை - 2023	விலை - ரூ.15/-
VOL:5	ISSUE: 02	JULY - 2023	Rs. 15/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-02 ஜூலை- 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன், 98400 83174

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



முன்னேறிச் செல், எப்போதும் முன்னோக்கியே நட, முன்னேற்றம் மட்டுமே உன் வாழ்வின் இலக்காக இருக்கட்டும். இப்பொழுது இருக்கும் உன் மனநிலையைக் குறித்து சிறிதும் அஞ்சாதே! அதிருப்தி அடையாதே! லட்சியத்தை அடைந்தே தீருவேன் என்று உன் உள்ளத்தில் உறுதியை உண்டாக்கிக்கொள்.

நீ செய்யும் செயல்களில் ஈடுபாடும் அந்த செயல் உனக்கு எவ்வளவு முக்கிய மானது என்ற உணர்வும் இல்லை என்றால் நீ செய்வதெல்லாம் நேரத்தையும், வாழ்க்கையையும் வீணடிப்பது மட்டுமே என்பதை உணர்ந்து கொள். வாழ்க்கையின் சிறு விஷயங்களிலும் முழு ஈடுபாட்டுடன் இருந்தாய் என்றால் அதில் நீ நிச்சயம் வெற்றி பெறுவாய்.

நீ படும் துயரங்களும், சிரமங்களும் தான் உனக்கு பெரிதாக இருக்கிறது. இந்த உலகில் சிரமப்படாமல் எதுவும் சாத்தியப்படாது. முதலில் எதுவும் சிரம மில்லை என்று நம்பு. சிரமம் என்று சொல்வதற்கு காரணம் உன் மனது தான். சிரமம் என்பதை கடந்தால் தான் லட்சியத்தை அடைய முடியும்.

மாபெரும் படைப்புகளை உருவாக்க நல்ல உணர்வுகளும், அபரிமிதமான மகிழ்ச்சியான மனநிலையும் மட்டும் இருந்தால் போதும். உனக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும். நான் என்றும் உனக்குத் துணையாக இருப்பேன். நம்பிக்கையோடு உன் கடமைகளை செய். சிறப்பான பலனை நான் கொடுக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபதாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது

இம்மாத இதழை, பாராயணப் பகலவன் திரு.சுந்தர் சாய்ராம் அவர்களும், திரு. உதி மூர்த்தி அவர்களும் வெளியிட, சென்னை மூலக்கடைச் சேர்ந்த வயது முதிர்ந்த பாபா பக்தை திருமதி. சாந்தா அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

இதழ் வெளியீட்டு விழாவில், நியூ ஈரா கார்மெண்ட் திரு. அகஸ்டின், சாயி சேவகர் திரு. உமா சங்கர், ட்ரு லிங்க் மேன் பவர் ஏஜென்ஸி திரு. அய்யா கண்ணு, பல்லாவரம் கவுன்சிலர் திரு. பரமசிவம், திரு. பாலா, திரு. தாகீர் சௌீப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் "சாய் தியானாலயா பிரார்த்தனை மையம்" சார்பில் அன்னபிரசாதம் வழங்கப்பட்டது. புத்தக வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும்





இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும் நமது இதழுக்கு, கோவை சண்முகம் சாய் ராம் அவர்கள், மூன்று வருட சந்தா நான்கும், மயிலாடுதுறை இரவி அவர் கள், ஒரு வருட சந்தா இரண்டையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும், நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கிறோம்.

ஒடிசாவின், பாலசோர் மாவட் டத்தில் உள்ள பாஹாநகர் ரயில் நிலையம் அருகே கடந்த 2ம் தேதி மூன்று ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்ட விபத்தில், 290 பேருக்கு மேல் உயிரிழந்திருக் கின்றனர். 1,000க்கும் அதிக மானோர் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.



பலியான அனைத்து ஆத்மாக்களும் எல்லாம் வல்ல பகவான் சாயிநாதரின் பாதத்தில் இளைப்பாற வேண்டுமாய் பிரார்த்திக்கின்றோம். அவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத் தினர் அனைவருக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

காயம்பட்டு சிகிச்சையில் இருப் போர் மிகவிரைவில் பூரண குண மடைந்து இல்லம் திரும்ப வேண்டும் என்று பகவான் சாயிநாதரை இறைஞ் சுகிறோம்.

அடுத்த மாதம் நமது "சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழ் ஆறாவது ஆண்டு துவக்க விழா மலராக மலர்கின்றது. விழாவில் பகவான் சாயிநாதருக்கு சிறப்பாக சேவை செய்த இருபது நபர்களுக்கு நமது இதழின் சார்பாக விருது வழங்கி கௌரவிக்கிகப்படுகிறது.

அது மட்டுமின்றி ஆண்டு விழா வினை மிகச்சிறப்பாக கொண்டாட விழா குழுவினர் முடிவு செய்தி ருக் கின்றனர். பாபாவின் பாடலுக்கு பரத நாட்டியம், பிரபல பஜனைக் குழுவினர்களின் பஜனை நிகழ்ச்சி, கேரள செண்டை மேளத்துடன் பல்லக்கு ஊர்வலம், அன்னதானம், பாபாவின் பக்தர்களுக்கு ஓவியப் போட்டி, சாய்ராம் எழுதும் போட்டிகள் என பலவகையான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர்.

பாபாவின் பக்தர்களாகிய நீங்களும், ஆண்டு மலருக்கு உங்களது வாழ்த்து விளம்பரங்களையும், விழாவிற்கு தங்களால் இயன்ற காணிக்கை களை யும் அளித்து ஆண்டு மலர் சிறப்பாக வெளிவர உதவுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத் துடனும்,நிம்மதியுடனும் வாழ வேண் டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!
வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்



"சாய் தியானாலயாவின்"

10வது சீரடி புனித யாத்திரை

"சாய் தியானலயாவின்" சார்பில் ஷீரடி புனித யாத்திரை 10 வது முறையாக கடந்த 12.06.23 திங்கட் கிழமை அன்று 32 நபர்களுடன் சென்னை எம்.ஜி.ஆர். இரயில் நிலையத்திலிருந்து "குண்டலினி யோகி" குரு ஸ்ரீராம் அவர்களின் தலைமையில் "பிரார்த்தனை செம்மல்" திரு.கலியன் சாய் மற்றும் "பாராயண பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்களுடன் சாய் பக்தர்கள் மதியம் 1.25 மணிக்கு புறப்பட்டோம்.

மறுநாள் காலை 7.30 மணியளவில் டவுன்ட் இரயில் நிலையத்தில் இறங்கி சிரமப் பரிகாரம் செய்து கொண்டோம். அங்கு எங்களை அழைத்துச்செல்ல தங்கும் விடுதியினர் ஏற்பாடு செய்த பேருந்து தயாராக இருக்க அதில் அனைவரும் அவரவர் இருக்கையில் அமர்ந்து மதியம் 12.30 அளவில் ஷீரடி அடைந்தோம்.

எங்களை வரவேற்ற தங்கும் விடுதியின் நிர்வாக மேலாளர் திரு. குப்தா அவர்கள் மதிய உணவு தயாராக இருக்கிறது அனைவரும் முதலில் உணவு அருந்துமாறு அன்புடன்



பணித்தார். அவர் கூற்றையேற்று உணவு அருந்திவிட்டு சிறிது ஓய்விற்கு பிறகு பகவான் சாய்நாதரை தரிசிக்க சென்றோம்.

எங்களது குழுவில் இருந்த 85 வயது முதிர்ந்த சாந்தா என்ற பாட்டியும் மூன்று மாதங்களுக்கு முன்னால் காலில் அறுவை சிகிச்சை மேற்கொண்ட 83 வயதான திரு.கோபால் சாய்ராம் உட்பட அனைவரும் பகவான் சாயிநாதரை தரிசிக்க பொது தரிசன வழியிலேயே



செல்வது என்று முடிவு செய்தோம்.

எங்களின் முடிவிற்கேற்ப பதினைந்து நிமிடங்களிலேயே பகவான் சாயிநாதர் எங்களுக்கு தரிசனம் கொடுத்தார். எங்கள் ஆண்டவரை கண்ணார கண்டு தரிசனம் செய்து மகிழ்ந்தோம். பிறகு சமாதி மந்திரில் இருக்கும் அடியவர்களின் சமாதிகளையும், லெண்டித் தோட்டம், சாயிநாதரால் ஏற்படுத்தப்பட்டு இன்றும் தொடர்ந்து எரிந்து கொண் டிருக்கும் நந்தா தீபம், அன்னை இராதா கிருஷ்ணமாயி அவர்களின் நினைவாக சமீபத்தில் உருவாக் கப்பட்ட நந்தா விளக்கு, மற்றும் அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டு, தியான மஹாலில் அனை வரும் சிறிது நேரம் தியானித்து ஆனந்த மடைந்தோம்.

தொடர்ந்து துவாரகாமாயி, சாவடி, அப்துல்லா வீடு, லட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு ஆகியவற்றை தரிசித்து இரவு எட்டுமணிக்கு தங்கும் விடுதியை அடைந்து இரவு சிற்றுண்டி முடித்து ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் (14.06.23) காலை 8 மணிக்கு சிற்றுண்டி முடித்துவிட்டு மினி தாஜ்மகால், பத்ரா மாருதி கோவில், கிரிஷ்னேஷ்வர் ஜோதிர்லிங்கம் இறுதியாக ஸம்பாஜிநகர் (அவுரங்காபாத்) எல்லோரா குகைக் கோவில்களை தரிசித்து இரவு 8.00 மணியளவில் தங்கும் அறைக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டோம். அனைவரையும் ஒருங்கிணைத்த குரு ஸ்ரீராம் அவர்கள் மறுநாள் காலை 6.00 மணிக்கெல்லாம் தயாராக இருக்குமாறு கூறினார்.

குருவின் கூற்றை ஏற்றார்போல் அனைவரும் சரியாக (15.06.23) காலை 6.00 மணிக்கெல்லாம் தயாராக இருந்தனர். அனைவரையும் அங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிவநேசன் சமாதிக்கு நடைபயண மாக அழைத்துச் சென்றார். அங்கு சென்றதும் "பிரார்த்தனை செம்மல்" திரு கலியன் சாய் அவர்களும் "பாராயண பகலவன்" திரு. சுந்தர் சாய்



அவர்களும் சிறப்புரை ஆற்றிய பின் குரு ஸ்ரீராம் அவர்களின் தியான நிகழ்வு நடைப்பெற்றது.

அப்போது வழக்கம்போல் பைரவர்கள் வந்து ஆசி வழங் கியதை புதியதாக யாத்திரையில் பங்கேற்ற பக்தர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கி பரவசப்பட்டனர்.

இந்நிகழ்ச்சி முடிந்ததும் அருகருகே இருக்கும் கந்தோபா ஆலயம், சகுரி உபாசினி மகராஜ், பஞ்சமுக வினாயகர் ஆலயம், பாபா தங்கும் ரஹதா வீரபத்ரா ஆலயம், குசால்சந்த் வீடு, பாபா இளைப்பாரும் கற்பகவிருட்ஷம் எனும் தென்னாப்பிரிக்கா மரம், மற்றும் பழைய ஷீரடி ஆகிய இடங்களை தரிசித்து மகிழ்ந்தோம்.

அன்று வியாழக்கிழமை என்பதால் மாலை மீண்டும் பகவான் சாய்நாதரை தரிசித்து பல்லக்கு ஊர்வலத்தையும் கண்டுகளித்தோம்.

மறுநாள் வெள்ளிக்கிழமை (16.06.23) காலை 8.20 க்கு சீரடியில் இருந்து சென்னைக்கு இரயில் புறப்ப டும் என்பதால் 7.00 மணிக்கே அனை வரையும் தயாராகும்படி கூறினார் குரு. ஷீரடியை விட்டு பிரிய மனமில்லாதது போன்று இருந்தது அன்றைய காலை நேரம். வேறு வழியில்லை புறப்பட்டு தான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தத்தால் சீரடியை விட்டு பிரிய மனமில்லாமல் இரயில் நிலையம் வந்தடைந்தோம்.

பயணத்தின் போது குரு ஸ்ரீராம் அவர்களோடு சத்சங்கம், பாராயணம், பிரார்த்தனை, தியானத்தின் நன்மைகள் கேள்வி பதில் என அன்றைய



இரயில் பயணம் எவ்வாறு கழிந்தது என்றே தெரியாத அளவிற்கு பகல் பொழுது கடந்து இரவையும் கடந்து மறுநாள் 17.06.23 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சென்னை வந்தடைந்தோம்.

மேலும் ஓர் அதிசயம் நடந்ததை இங்கே பகிர்ந்துக்கொள்ள விரும்புகி றேன். மேலே குறிப்பிட்ட எல்லோரா குகைக்கு 14.06.23 அன்று என்னுடைய குடும்பத்தாரும், திரு. ராஜசேகர் குடும்பத்தாரும், குரு அவர்களுடைய குடும்பத்தாரும் மேற்கு திசையில் அமைந்துள்ள சிற்பங்களை இரசித்த படி குகை எண் 37ற்கு சென்றோம்.

அங்கு புத்தர் சிலைக்கு இடப்புறமாக தியான செய்வதற்கேற்றார் போல் அமைந்திருந்த சிறு குகையில் குரு



ஸ்ரீராம் அவர்கள் தியானத்தில் அமர அவரை புகைப்படம் எடுத்தோம். அவர்கூடவே குழந்தைகளும், நண்பர்களும் தனித்தனியாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். குகை இருட்டாக இருந்ததால் ஒளி விளக்கைப் பயன்படுத்தி புகைப்படம் எடுத்தோம் .

அதுதான் எங்கள் அனைவரையும் ஆச்சர்யத்தில் மூழ்கடித்தது ஆம் எடுத்த புகைப்படத்தை பார்க்கிறோம். அதில் குருவின் தலைக்கு மேலே நீல வண்ணம் தெரிந்தது அடுத்து தலைப்பகுதியை தொட்டாற்போல் இருந்தது அடுத்து தலைமுழுவதும் படர்ந்து இருந்தது இறுதியாக நெஞ்சுக்குழியில் மட்டும் இருந்தது.

அவரை எடுத்த நான்கு புகைப் படத்திலும் அடுத்தடுத்த காட்சிகளாக அமைந்திருந்தது. அந்நீலவண்ணம் மற்றவர்களுடன் குரு இருக்கும் புகைப்படத்தில் காணவில்லை. இந்நிகழ்வானது எங்களுக்கு மிகுந்த ஆச்சர்யமும், அதிசயமாகவும் இருந்தது. இந்நிகழ்ச்சியை தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்புனிதப் பயணத்தில் மூலம் எங்களை சீரடிக்கு வர அனுமதித்த சற்குரு சாயிநாதருக்கும், இப்புனிதப் பயணத்தில் எங்களை இணைத்து வழிநடத்திச்சென்ற எங்களது குரு ஸ்ரீராம் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

குரு வாழ்க! குருவே சரணம்!

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 99418 16692

குரு பூர்ணிமா



ஜூலை 3 திங்கட் கிழமை நம் ஆன்மீக மற்றும் லௌகீக வாழ்வில் மிக உன்னதமான நாள். ஆம் நண்பர்களே! நம் வாழ்வில் மாய இருளில் தவிக்கும் நம் மனதிற்குள் இருக்கும் இருளை நீக்கி பரம் ஜோதியைக் காட்டும் நம் இரு குரு மகான்களை நன்றியுடன் வழிபடும் நன்னாள்.

இன்னாளில் நமது சமர்த்த சற்குரு சாய் மகராஜையும், அவர்தம் வழியில் நின்று ஒளிவிளக்காய் நம்மை வழிநடத்தும் நமது குரு ஸ்ரீராம் சாய் அவர்களையும், இப்புண்ணிய குரு பூர்ணிமா நன்னாளில், நம் இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்குவோம் வாரீர்.

குரு பூர்ணிமா சீரடி சாய் மந்திரில் மிகவும் கோலாகலமாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகின்றது. பிரதானமாக "குருஸ்தான்" வேப்ப மரத்தடியில் உள்ள பாதுகைகளுக்கு ருத்ராபிசேகம், ஹோமம், மற்றும் விசேச பூஜைகளும் களைகட்டும். அக் காட்சிகளை காண கண் கோடி வேண்டும்.

இந்த நாள் மிகவும் முக்கியமாக நமக்கு நான்கு வேதங்களையும் தொகுத்துக் கொடுத்த மகரிஷி வேத வியாசர் பிறந்த நாளாக அறியப் படுகிறது. "வீயாஸாய விஷ்ணு ரூபாய வியாஸ ரூமாய விஷ்ணவே" எனும் மந்திரத்தினால் வேதவியாசர் போற்றப்படுகிறார்.

வியாச பகவான் மற்றும் வேத வியாசர் என்றெல்லாம் அழைக்கப்படும் வியாசர் இறைவன் விஷ்ணுவின் அவதாரமாக போற்றப்படுகிறார். வேதங்கள் இறைவனின் மூச்சாக மதிக்கப்படுகின்றது. நம் வாழ்விற்கு வழிகாட்டவே, இருள் நீக்கி ஒளி ரூபமாக வேதம் போற்றப்படுவதால் குரு என்ற சொல்லுடன் (கு இருள், ரு நீக்குபவர்) பரிபூரணமான பவுர்ணமி நன்னாளில் "குரு பூர்ணிமா" என்று போற்றப்படுகின்றது.

சந்திரன் நம் மனதிற்கு அதிபதியாக ஆட்சிபுரிவதால் முழுவடிவமாக பவுர்ணமி நாளில் தன் முழு சக்தியுடன் பரிமளிக்கும் காலம் நம் மனோபலம் உச்சத்தில் இருக்கும். குருவருளும், உச்சகட்ட மனோபலமும் சேர்ந்து விளங்கும் இந்த குரு பூர்ணிமா திருநாளில், நம் அனைவருக்கும் ஒளியாய் அமைந்திருக்கும் நம் குருமார் களை வழிபடுவதும், நேரில் சந்தித்து ஆசி வேண்டுவதும் நம் வாழவிற்கு "ரீ ஜார்ஜ்" போன்ற ஒரு வாய்ப்பாகும்.

குருவின் பார்வையும் ஆசீர்வாதமும் நம் அனைவருக்கும் கோடி நன்மையை பெற்றுத் தருவது திண்ணம். சாய் சொந்தங்கள் அனைவருக்கும் சாய் மகராஜ் குருவை தேடி இதழின் மூலம் குரு பூர்ணிமா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

குரு வாழ்க! குருவே சரணம்!

– சுந்தர்சாய்

ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திரம்

வருஷாபிஷேக விழா



ஜெய் ஜெய் ஸ்ரீ சுவாமி சமர்த்த!

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திர மேரூர் வட்டம், மருதம் கிராமத்தின் குளக்கரையில் ஏகாந்தமாய் வீற்றிருக்கும் ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திரம் திருக்கோவிலின் வருஷாபிஷேக விழா கடந்த 30.04.23 வைகாசி 16 ஆம் நாள் செவ்வாய் கிழமை காலை 8.00 மணிக்கு கோலாகலமாக நடந்தேறியது

பத்மபுரம் லலிதாம்பிகா பீடம் ஸ்ரீ மாதா ஸ்ரீ பாலானந்த சுவாமி களின் திருக்கரங்களால், கோ பூஜை, ஸ்ரீ கணபதி ஹோமம், சகல செளபாக்கியம் மங்களங்கள் அருளும் தத்த ஹோமம்,பூர்ணாஹுதி, அபிசேக அலங்காரங்கள்,தத்த ஸஹஸ்ர நாம அர்ச்சனை, தூப தீப நைவேத்தியம், மஹா ஆராதனைகள் அனைத்தும் மிகச்சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டன.

கடுமையான வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் வெளியூர்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஆலயத்தின் சார்பில் காலை சிற்றுண்டியும், மதியம் அன்ன தானமும் வழங்கப்பட்டன.

இயற்கை எழில் சூழ்ந்த மருதபுரத்தில் கிராமத்து குளக்கரையில் ஆலயம் எழுந்தருளியிருப்பது மிகவும் சிறப்புக்





குறியதாக அமைந்திருக்கிறது.

கருவறையில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ சுவாமி சமர்த்தர், ஸ்ரீ நரசிம்ம சுவாமி, ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆகியோர் பளிங்கு கற்களில் சிறப்புற வடிவமைக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்கள். மூவரையும் ஒரே கருவறையில் காண் பதற்கு காண கண் கோடி வேண்டும்.

அதுமட்டுமா, இக்கோவின் ஆலய அமைப்பே மிகவும் நூதனமாக அமைக்கப்பட்டிருக் கின்றது. ஆலயத்தி னுள் நுழைந்ததும் நாம் முதலில் மும்மூர்திகளாக அருள்பாலிக்கும் ஸ்ரீசமர்த்தர், ஸ்ரீ நரசிம்ம சுவாமி, ஸ்ரீ சாயிபாபா ஆகியோரை தரிசித்து ஆலயத்தை வலம் வந்தால் கருவறையின் கீழே மற்றுமொரு கருவறைக்கு நம்மை அழைத்துச் செல்கின் றன படிகட்டுகள்.

ஆலயத்தின் கீழ் பகுதியில் ஸ்ரீ சுவாமி சமர்த்தரின் பாதுகைகள் பிரதிட்டை செய்யப்பட்டு தியானம் செய்வதற்குண்டான அமைதியான சூழல் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அற்புதமான ஆன்மீக அதிர்வுகளைக் கொண்ட ஆலயம் ஸ்ரீ தத்த பாதுகா சேத்திரம்.

பக்தர்கள் அனைவரும் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது இவ்வாலயத்திற்கு வந்து தரிசிப்பது மட்டுமல்லாது இங்கு ஒரு நாள் இரவாவது தங்கிச் செல்வது உங்களது வாழ்வில் அநேக நன்மைகளை அளிக் கும் என்பது சத்தியமான உண்மை. இதைப் படிக்க நேரும் அன்பர்கள் இவ்வாலயத்திற்குச் சென்று உங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

பல்வேறு பிரட்சனைகளுக்கு நடுவே வைராக்கியமாக இவ்வாலயத்தை கட்டி முடித்து பக்தர்களுக்கென ஆன்மீக சேவையில் ஈடுபட்ட ஆலய நிர்வாகி திருமதி. மஞ்சரி ரமேஷ்பாபு அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் பகவான் சாயிநாதரின் பேரருளால் நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று " சாயி மகராஜ் குருவைதேடி" குழுவினர் மனதார வாழ்த்துகிறோம்.

<u>ஆலய தொடர்புக்கு,</u>


திருமதி. மஞ்சரி ரமேஷ் பாபு,

ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திர ராஜ்யம், திருப்புலிவனம், மாருதிபுரம், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

செல்: 99409 41049, 70106 26417.



திருவருள் தேடி..!



ஓம் சாய்ராம். நமது சாய் மகராஜ் குருவை தேடியில் பயணிக்கும் சாய் சொந்தங்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்த்தி கரம் குவித்து வணங்கும் சுந்தர்சாய். இது ஒரு சுயசரிதை போன்று தெரிந்தாலும் உண்மையில் "சுயத்தை (நான்) இழந்த கதை" என் வாழ்க்கையில் நடந்த சில உண்மை சம்பவங்களை இந்த தளத்தில் பகிர்ந்து கொள்ள சாய் மகராஜ் இட்டபணி. இதன்மூலம் சற்குரு சாயி பக்தர்களுக்கோ, அவர்களின் நண்பர்களுக்கோ, நம்பிக்கை பலப்படும் எனில் சாய் மகராஜின் அருள்மழை அமிர் தமாய் பொழிந்து அனைவர் வாழ் விலும் மலரும் மாற்றமும், ஏற்றமும்.

ஒரு இனிய காலை நேரத்தில் பெங்களூரில் இருந்து ஹைதராபாத் பேரூந்து பயணத்தில் நான், மழைக்காலத்தில் சாலை எங்கும் தடைகள் ஏற்பட்டு வண்டி தாமதமாக வந்து கொண்டிருந்தது. அது என் மனக்கவலையை அதிகப்படுத்தியது. அன்று ஞாயிற் றுக்கிழமை விடுமுறை நாள். முக்கிய மான சொந்த வேலைகளை கவனிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஹைதராபாத்தில் என் சிறு குடும்பத் துடன் இருந்த வாடகை வீட்டை காலி செய்து வேறு வீடு மாற வேண்டிய கட்டாயம். அதனால் வேறு மனக்கவலை அதிகமாயிற்று. பேரூந்து அன்று காலை எட்டு மணிக்கு ஜட்சர்லா என்ற நிறுத்தத்தில் டீ, காபிக்காக நிறுத்தப்பட, அந்த வினாடி என் மனம் ஒன்றை நினைக்கிறது.

என் மனம் தான் நினைத் ததா? அல்லது என்னை ஆட்டிப்படைக் கப்போகும் அந்த இறைச்சக்தி என்னை அப்படி நினைக்க வைத்ததா? அன்றைய தேதியில் அது எனக்கு விளங்க முடியாத

புதிர். பேரூந்தில் அமர்ந்தபடியே என்னையும் அறியாமல் அந்த பிரபஞ்ச சக்தியை வேண்டுகிறேன்.

பாபா நான் என்ன கார் பங்களா என்றா கேட்கிறேன். என் வயதான தாய், என் மனைவி, எனது நான்கு வயது மகன் இவர்களுடன் வாழ ஒரு இரண்டு படுக்கயறை கொண்ட சொந்தமான வீடு. இதை எனக்கு அருள் புரிய மாட்டாயா, நாற்றுக்கு நூறு சுயநலமான பிரார்த்தனைதான். அதுவும் முன் பின் அறியாத தெய்வத்திடம்.

இந்த வேண்டுதலுக்கு உடனே கிடைத்த பதில். அற்புதம் மிகப்பெரிய அனுக்கிரகம். இன்றளவிற்கு நான் ஆனந்தமாக இருக்க காரணமானது அந்த விநாடிகள்தான். இந்த எண்ணம் என் மனதில் எழுந்தவுடன் பேரூந்தில் இருந்து கீழே இறங்கி அன்றைய நாளிதழ் "டெக்கான் ஹெரால்ட்" வாங்குகிறேன். அதைப் பிரித்தவுடனே கண்ணில் படுகிறது 2 பக்க விளம்பரம் "Gharonda Seshsa Sayee Apartments" அந்த விளம்பரம் கண்ணில் படும் நேரம், குடியிருப்பின் பெயர், எனது மன ஓட்டத்தில் பாபாவிடம் வேண்டியது எல்லாமே ஒரே நேர்கோட்டில் அமைந்தது தற்செயலா? அல்லது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதா?

ஏதோ இனம் புரியாத ஒரு மன நிம்மதியுடன் ஹைதராபாத் வந்து இல்லம் சேர்ந்தேன். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் முதல் வேலையாக முடிவெட்டலாம் என்று கடைக்குச் சென்றேன். அது 10 லிருந்து 14 சேர் வரை இருக்கும் பெரிய கடை. காலியாக இருந்த இருக்கையில் சென்று அமர்ந்து நிமிர்ந்து பார்க்கிறேன். என் இறுக்கையின்



முன்னால் சத்யசாயி பாபாவின் படம் மாட்டப்பட்டிருக்கிறது. அதையும் என் மனம் கவனிக்கின்றது.

பிறகு வீட்டிற்கு வந்து குளித்து விட்டு உணவு அருந்திய பின் இது பற்றி வீட்டாரிடம் பேசியபின், விளம்பரத்தில் குறிப்பிட்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்த குடியிருப்பு நிறுவனத்திடம் பேசினேன். பிறகு அவர்களது அலுவலகத்திற்கு நேரில் சென்று அனைத்தையும் விசாரித்து அறிந்தோம். விலை விபரம் கேட்டறிந்த பின்புதான் எங்களது பட்ஜெட்குள் வராததால் பதில் எதுவும் சொல்லாமல் எழுந்து கொண்டோம்.

அவர்கள் விபரம் கேட்க நான் எனது பட்ஜெட்டை கூற, அவர்களும் உடனே வங்கியில் கடனுக்கு ஏற்பாடு செய்து தருகிறோம் என்று கூற, அதில் எனக்கு விருப்பமில்லை என்று நான் கூறினேன். அவர்களோ நீங்கள் என்ன விலையில் எதிர் பார்க்கின்றீர்கள் என்று கேட்க, நானும் அவர்களது விலையில் பாதி விலையைக் குறிப்பிட்டேன்.

உடனே அவர்கள் அந்த விலைக்கு, அருகிலேயே நாங்கள் தற்சமயம்

வேறொரு குடியிருப்பைக் கட்டிக் கொண்டிருக்கின்றோம். அதை வேண்டுமானால் சென்று பார்த்து விட்டு வாருங்கள். பிடித்திருந்தால் பதிவு செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். அதிர்ஷடவசமாக அந்த குடியிருப்பு நாங்கள் வசித்த வாடகை வீட்டின் அருகிலேயே இருந்தது.

என்னே உன் கருணாவிலாசம் சாய்! அன்றே மதியம் அவர்கள் குடியிருப்பு வளாகத்தை சென்று பார்வையிட்டு முழுமனதுடன் அந்த வீட்டையே பதிவு செய்து கொண்டேன். நான் எதிர் பார்த்த விலையில், கடன் இல்லாமல் இரண்டு படுக்கை அறை வசதியுடன் கூடிய இடத்தை பதிவு செய்த அந்த அனுபவத்தை நினைத்து நாங்கள் சற்று அதிகமாகத்தான் மகிழ்ந்து போனோம்.

ஆனால் அந்த சூழ்நிலையில் வீடு வாங்கியதற்காக மகிழ்ச்சி அடைந்தோமே தவிர பின்னாளில் நடக்கவிருப்பதை துளியும் என்னால் ஊகிக்க முடியாமல் போனது. ஆம் வீடு வாங்கியது எனக்கல்ல. என்பது பின்புதான் உணரமுடிந்தது.

அது நமது சற்குரு சாய் மகராஜ் எங்கள் மனதில் குடியேறுவதற்காக என் உள்ளத்தில் குரலாய் எண்ணத்தின் திண்ணமாய் வேண்டுதலையும் செய்ய வைத்து அதை உடனே என் தகுதிக்கேற்றார் போல், கடனின்றி நமக்கு பழகிய பகுதியிலேயே கிட்ட தட்ட கட்டி முடிக்கும் நிலையில் உள்ள ஓர் குடியிருப்பில் நம்மை அமர்த்தி அழகு பார்க்க யாரால் முடியும்.

இன்று ஏறக்குறைய 25 ஆண்டுகள் தாண்டிய நிலையில் இந்த நிகழ்வை அசை போடும் சமயம் அன்று ஆரம்பித்த கருணை மழையினால் என் மனம் எனும் நிலத்தில் விளைந்த விளைச்சல் கிடைத்ததற்கரிய நல்ல மகசூல் அன்றோ என் சாயி தேவா!

"தெய்வம் கொடுக்கும் போது கூரையை பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" என்ற பழமொழிக்கேற்ப, சற்குரு சாயிராமின் பரம கிருபையால் மாயா விலாசமாக இருந்த எனது "மார்க்கெட்டிங் வாழ்க்கை" எனும் வீட்டின் கூரையைப் பிய்த்து கொண்டு கொட்டிய அளவில்லாத ஆன்மீகச் செல்வத்தை, அன்பை, நான் மட்டுமின்றி இன்று எம்மோடு பயணிப்பவர்களுக்கும் பயன்பெறும் வகையில் அமைத்துக்கொடுத்த சாய்நாதரின் கருணை மழைதான் எத்தகைய மனக்குளிர்ச்சியாக எம்முள் பரிணமிக்கிறது. சத்யம் என்றால் உண்மை. சத்ய சாயி என்றால் பேருண்மை.

அன்றைய நாளில் இந்த விபரங்கள் ஏதும் புரியாத ஒருசராசரி பிராமணக் குடும்பத்தில் பிறந்து படித்து முடித்து ஒரு தனியார் கம்பெனியில் மருந்து விற்பனைத் தொழிலில் துணை விற்பனை மேளாளராக வேலையில் இருந்த எனக்கு சொந்தமாக ஒரு குடியிருப்பு என்பது சாதனைதான்.

குடும்ப வாழ்க்கையில் கடனில்லாத ஓர் சொத்து. என் வாழ்க்கையில் ஒரு மைல் கல் என்று பெருமைப்படலாம்.

ஆனால், அந்த வீட்டில் கிரகப் பிரவேசம் செய்து கம்பீரமாக குடியேறி புதிய அண்டை வீட் டார்கள் மத்தியில் எப்பொழுதும் டிப்டாப்பாக உடை உடுத்தி டை கட்டிக்கொண்டு,அதிகமாக ஆங்கிலம் பேசிக்கொண்டு, கர்வமாக வாழ்ந்த வாழ்வில் ஒரு திடீர் திருப்பம்.. அது அவன் விருப்பம்.

– (தொடரும்)

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

புனித யாத்திரை



ஸ்ரீ சீரடி சாய்பாபா குறை ஒன்றும் இல்லை பிராராத்தனை சமாஜ் திரு. வேணுகோபால் அவர்கள் 25 சாய் பந்துக்களுடன் சென்ற 11.06.2023. முதல் 15.06.2023 வரை ஷீரடி நாசிக், பண்டர்பூர், சித்தேஸ்வரர், ஷோலாப்பூர் போன்ற புண்ணிய தலங்களுக்கு புனித யாத்திரை சென்று, உலக மக்களுக்காக அமைதியும், அன்பும் வேண்டி பிரார்த்தனை செய்து கொண்டு தரிசித்த புண்ணிய தலங்களில் எல்லாம் அன்னதானம் செய்து இல்லம் திரும்பியிருக்கின்றார்.

அதன் தொடர்ச்சியாக 18.06.2023 அவர்களது இல்லத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்த சாய் நாதருக்கு அபிஷேகம் ஆராதனைகளும், பூஜை, புனஸ்காரங்களும், பஜனை, பிரார்த்தனைகளும் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டன. பெருந்திரளாக





கலந்து கொண்ட பக்த கோடிகள் ஸ்ரீ ஆனந்த சாய்பாபாவிற்கு தங்கள் கைப்பட ஆரத்தி காட்டி வணங்கி மகிழ்ந்தனர்.

இன்றைய நாளில் அநேகர் புனித யாத்திரை செல்கிறோம். ஆயினும் முறைப்படி செல்கின்றோமா என்றால் கேள்விக்குறிதான். புனித யாத்திரை என்பதை முறைப்படி செல்வதை திரு. வேணுகோபால் அவர்கள் இன்றும் கடைப்பிடிக்கின்றார்

சீரடிக்கு புனித யாத்திரை தொடங்குவதற்கு முன் யாத்திரீகர்கள் அனைவரும் திரு.வேணுகோபால் அவர்களின் இல்லத்தில்கூடி, சீரடி சாய்நாதரை வழிபட்டு, கையில் சாயி ரட்சை கட்டிக்கொண்டு விரதமேற் கொள்கின்றனர்.

அதன் பிறகு குறிப்பிட்ட தேதியில் யாத்திரைக்கு பதிவு செய்த சாயி பக்தர்கள் அனைவரும் திரு. வேணுகோபால் அவர்களின் இல்லத்தில் இருந்து சீரடிக்கு புனித யாத்திரை புறப்படுகின்றனர்.

அனைத்து புண்ணிய தலங்களிலும் தரிசனம் முடித்ததும் யாத்திரீகளில் ஒருவர் அனைவருக்கும் அன்னதானம் செய்கின்ற வழக்கத்தினை கடைபிடிக்கின்றார்கள். அனைத்து புண்ணிய தலங்களில் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்யும் செலவுகளையும் யாத்திரீகர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

புனித யாத்திரை முடிந்ததும் நாம் இரல்வே நிலையத்தில் இருந்து அப்படியே டாடா காட்டி அவரவர் இல்லத்திற்குச் சென்று விடுவோம். ஆனால் திரு. வேணுகோபால் அவர் களது யாத்திரை அப்படி முடிவதல்ல.

எங்கிருந்து யாத்திரை புறப்பட்டதோ அங்கே யாத்திரீகள் அனைவரும் ஒன்று கூடி சாய்நாதருக்கு பூஜை



புனஸ்காரங்கள் செய்து 108 அஷ்டோத் திர நாமாவளி கூறி, சாய் சத்சரிதத்தின் சுருக்கமாக 306 வரிகள் கொண்ட சாயிநாத போற்றிகளைக் கூறி பஜனை பாடி அனைவருக்கும் அன்னதானம் அளித்து புனித யாத்திரையை நிறைவு செய்கிறார்கள்.

முறைப்படி சீரடி புனித யாத்திரை செய்துவரும் திரு வேணுகோபால் அவர்களும், அவர்களது குடும்பத் தாரும், எல்லாம் வல்ல பகவான் சீரடி சாயிநாதரின் அருளால், நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ் பெற்று அனைத்து நலன்களுடன் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க வளமுடன்!

ஓம் சாய்ராம்.

தொடர் –60

குருவைத் தேடி

ஓ..பையா..ஓ..பையா என்ற குரல் மட்டும் எங்கிருந்தோ என் காதுகளில் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். என் பின்னால் மோட்டார் பைக்கில் இரண்டு போலீஸ்காரர்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

மராட்டிய போலீஸ்காரர்களைப் பார்த்ததும் மனதிற்குள் சற்று பயமாய் இருந்தது. அந்தப் பாதையில் என்னைத்தவிர வேறு யாரும் இல்லை. அவர்கள் என்னை நோக்கித்தான் வருகின்றார்கள் என்று புரிந்து கொண்டு நான் ஓரமாக ஒதுங்கி நின்றேன்.

என்னருகே வந்த போலீஸ்காரர்கள் இருசக்கரவாகனத்தில் இருந்து இறங்கினார்கள். அவர்களது கையில் ஓர் பை இருந்தது. அவர்களில் ஒருவர் என்னிடம் வந்து மராட்டியில், சற்று மரியாதையுடன், நீங்கள் சீரடிக்குத் தானே செல்கின்றீர்கள் என்று கேட்டார். நான் ஆமாம் என்றேன்.

ராஜ்கூர்நகர் ராமலிங்கம் சுவாமிகள் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள் என்று அந்தப் பையை என்னிடம் கொடுத்துவிட்டு, இதில் உணவு இருக்கின்றது. சாப்பிட்டுவிட்டு சற்று வேகமாக நடந்தால் இருட்டுவதற்குள் நாராயண்காவ் என்ற ஊர் வரும் அங்கு இரவு தங்கிவிட்டு புறப்படச் சொன்னார்கள். தாமதிக்க வேண்டாம்.நாராயண் காவ் இங்கிருந்து இருபது கிலோ மீட்டர் தூரம். இந்தப் பகுதி திருடர்கள் நடமாடும் பகுதி எனவே இருட்டுவதற்குள் சென்று



விடுங்கள் என்று கூறிவிட்டு திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

திருடர்கள் பகுதியா? எனக்குள் சற்றே பயம் எட்டிப்பார்த்தது. நான் பையைப் பிரித்துப் பார்த்தேன். அதற்குள் தமிழ்நாட்டு உணவான சாதம், சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரியல், அப்பளம், ஊறுகாய், என்று அத்தனையும் இருந்தது. சாதம் சாப்பிட்டு இரண்டு நாள் ஆயிற்று. சாதத்தைப் பார்த்ததும் எனக்குள்

பசி அதிகமாயிற்று. நான் நடந்து கொண்டிருப்பேன் என்பது ராமலிங்கம் சுவாமிகளுக்கு எப்படித் தெரியும்.

அவன் நடந்துதான் சீரடிக்குச் செல்வான் இடையில் உணவு கிடைக்காது. அவனுக்கு உணவு அனுப்பி செல்லும் வழியைப்பற்றி விபரம் கூற வேண்டும் என்று இரண்டு காவலர்களிடம் விபரம் கூறி அனுப்பியிருக்கின்றாரே யார் அவர்?

பசிக்கின்றது என்று நான் மனதிற்குள் நினைத்ததுமே உணவகம் இன்றி, பணம் இன்றி என் கைகளுக்கு உணவு வந்துவிட்டதே அது எப்படி? சரி அதெல்லாம் இருக்கட்டும். உணவு கொடுத்தவர்களுக்கு ஒரு நன்றியாவது சொன்னோமா?

உணவைப் பார்த்ததும் எனக்கு இவைகளைப்பற்றி சிந்திக்க மனமில்லை. என்ன மனித மனமடா!

கையில் உணவுடன் சுற்றும் முற்றும் பார்த்தேன். சற்று தூரத்தில் ஒரு மர நிழல் இருந்தது. அங்கு சென்று ஆர்வமாய் உணவை பிரித்து வைத்து வயிறுமுட்ட சாப்பிட்டேன். சற்று இளைப்பாறிச் செல்லலாம் என்று மனதில் நினைத்துக்கொண்டேன். திருடர்கள் பகுதி என்று காவலர்கள் சொன்னதுவேறு மனதில் பயமுறுத்தியது. இருந்தாலும் "உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டே"

நடந்து வந்த அலுப்பு வேறு, சற்றே கண் அயர்ந்து விட்டேன். கண் முழித்துப் பாரக்கின்றேன் மணி மூன்றுக்கு மேல் இருக்கும். அடடா தூங்கிவிட்டோமே! இருட்டுவதற்குள் இருபது கிலோ மீட்டர் நடக்க வேண்டுமே என சட்டென எழுந்து கொண்டு பையை எடுத்துக் கொண்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தேன்.

"சே, சோறு கண்ட இடமே சொர்கமாகி விட்டதே! உணவுப் பையை எடுத்துக் கொண்டு ஒரு பத்து கிலோ மீட்டர் நடந்திருக்கலாம். பிறகு சாப்பிட்டுவிட்டு நடந்திருந்தால் பத்து கிலோ மீட்டரை விரைவாக கடந்திருக்கலாம். இப்போது நினைத்து என்ன செய்வது. உணவைப் பார்த்ததுமே மதியிழந்து விட்டோமே என்று என்னை நானே நொந்து கொண்டு நடந்து கொண்டிருந்தேன்.

மனதிற்குள் தோன்றிய பயம் என்னை எங்கும் ஓய்வெடுக்கவிடாமல் நடக்க வைத்துக்கொண்டிருந்தது. அன்று நான் நடந்த நடை வாழ்க்கையில் என்றுமே நடந்ததில்லை. அன்றைய சூழலில் என்னிடம் வைராக்கியம் மட்டுமே இருந்தது. ஏன்? எதற்கு? எப்படி? என்று சிந்தித்துப் பார்க்கும் எண்ணம் துளியும் இல்லை. நான் சீரடியில் கால்வைப்பதற்குள் என்னை ஏன்? எதற்கு? எப்படி? என்று சிந்திக்கும் அளவிற்கு என்னை மாற்றிவிடுவார் சாயி என்று நான் அப்போது நினைத்துக்கூட பார்க்கவில்லை.

நான் சீரடியை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். பாதை சரியானதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் யாரோ என்னை வழிநடத்துகின்றார்கள் என்பதை மட்டும் என் உள் மனம் உணர்ந்து கொண்டிருக்கின்றது. ஏன் என்றால் நான் என் மனைவியையும் இரு குழந்தைகளையும், தனியாக விட்டுவிட்டு வந்திருக்கின்றேன். அதுமட்டுமல்ல, நூறு ஊழியர்களுடன் இயங்கிவந்த என் தொழிலையும் விட்டுவிட்டு வந்திருக்கிறேன்.

திரும்ப நான் ஊருக்கு செல்வேனா? கட்டாயம் செல்லவேண்டும். ஊருக்குச்

சென்று என்ன செய்து என் மனைவி குழந்தைகளை காப்பாற்றப் போகிறேன். ஏதும் அறியேன். ஆனால் தற்போது எதைப்பற்றியும் கவலை இல்லாது நடந்து கொண்டு இருக்கின்றேன். சிறிதாவது என்னை கவலை தொற்றிக் கொண்டால் என்னால் நிச்சயம் நடக்க முடியாது.

ஆயினும் என்னைத்தாண்டி ஏதோ ஒரு சக்தி என்னை வைராக்கியத்துடன் வழி நடத்திக்கொண்டிருக்கின்றது. அதை சாயி என்று ஏற்றுக் கொள்ள லாமா? என்று என் மனம் சாயியிடம் சரணடைய ஏங்குகிறது. ஆனால் எனக்குள் இருக்கும் "திராவிட மாயை" பணிய மறுத்து வேறு எங்கோ எனை இழுக்கிறது.

இரண்டு குதிரையும் ஆளுக்கொரு திசையாய் எனை இழுக்க நான் நடந்து கொண்டிருந்தேன். பொழுது சாய இன்னும் கொஞ்ச நேரம்தான். கீழ் வானில் சூரியனின் கதிர்களை பூமியின் சுழற்சி மெல்ல மறைத்துக் கொண்டிருந்தது.

இருபுறமும் பொட்டல்காடு. ஆங்காங்கே ஒத்தையாய் நிற்கும் பட்டுப்போன மரங்கள். எப்போதோ, எங்கேனும் எனைத்தாண்டிச் செல்லும் உள்ளூர்வாசிகள். மணிக்கொருதரம் எனைக்கடந்து போகும் தென்னகத்து லாரிகள். விநோதமாக எனைப்பார்த்து செல்லும் இருசக்கர வாகன ஓட்டிகள்.

பூமிப்பந்தில் நான் வசிக்கும் பகுதியில் பகல்பொழுது கரைந்துபோய் இரவின் நிழல் படியத் தொடங்குகிறது. என் கால்கள் களைத்துப் போய் கெஞ் சத் தொடங்கின. தூரத்தில் சிற்சில வீடுகளும் கடைகளும் தெரியத் தொடங்கின. காவலர்கள் கூறிய நாராயண்காவ் என்ற ஊராகத்தான் இருக்க வேண்டும்.

எனது ஊகம் சரியா என்று விபரம் அறியும் நிலையில் நான் இல்லை. நடந்த அலுப்பு என்னை ஓய்வெடுக்கத்தூண்டியது. மெல்ல நடந்து வந்த நான் ஊரில் எல்லையில் இருந்த சாவடி போன்றதொரு அமைப் பைக் கண்டேன். அது சாவடிதான் என்றாலும் அதில் கீழே தரையும், மேலே கூரையும்தான் இருந்தது. சுற்றிலும் பெயருக்குக்கூட சுவர் இல்லை.

திண்ணை போன்றதொரு அமைப்பில் இருந்த மண்மேட்டில் ஏறிப் பையை தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டேன். நடந்து வந்த களைப்பில் படுத்தவுடனே தூங்கிப்போய்விட்டேன். அப்போது மணி ஏழு இருக்கலாம்.

ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்த எனக்கு யாரோ தடதடவென்று ஓடும் சப்தம் கேட்க சட்டென்று விழித்துப் பார்த்தேன். சற்று தூரத்தில் யாரோ ஒருவர் ஓட அவரை ஒருவர் துரத்திக்கொண்டிருந்தார். நல்ல இருட்டு ஓரிரெண்டு இடங்களில் மட்டும் தெருவிளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. இந்த நள்ளிரவில் யார் அவர்கள்? எதற்காக துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள்?

எனக்கு தூக்கம் வரவில்லை. எழுந்து உட்கார்ந்து கொண்டு வானத் தைப் பார்த்தேன் பாதி நிலா எனக்கு நேர் எதிரில் வானத்தில் காய்ந்தது கொண்டிருந்தது. மணி 2 க்கு மேல் இருக்கலாம் என்று கணித்துக் கொண்டேன்.

சற்றுநேரத்தில் என்னை நோக்கி ஒரு கிராமத்தான் போலிருந்தவர் ஓடி வந்தார். வந்தவர், மராட்டியில் யார் நீ, யார் நீ ஏன் இங்கு படுத்திருக்கின்றாய்

என்று மிரட்டும் தொணியில் என்னிடம் கேட்டார். நான் சீரடி.. சாயிபாபா... பாத யாத்ரா... என்று தான் கூறினேன். உடனே அவரின் பதட்டம் குறைந்தது. அவரி அமைதியானார்.

சற்றுநேரத்திற்கு பின் எங்கிருந்து வருகிறாய் என்றார். நான் மெட்ராஸ் என்றேன். மெட்ராஸ் என்ற பெயரைக்கேட்டவுடன் அவர் முகம் சற்று பிரகாசமானது. எனது மகன், மருமகள் எல்லாம் மெட் ராஸில்தான் வேலை செய்கிறார்கள் என்று கூறியவர், இங்கெல்லாம் படுக்கக்கூடாது. திருடர்கள் அதிகம். சற்று நேரத்திற்குமுன் உன்னருகில் ஒரு திருடன் நின்று கொண்டிருந்தான். எதார்த்தமாக நான் பார்த்து சப்தமிட்டு துரத்திக் கொண்டு ஓடினேன். அவன் ஓடிவிட்டான். உன் பொருள் பணமெல் லாம் சரியாக இருக்கிறதா என்று பார் என்றார்.

நானும் பணம் வைத்திருந்த உள் பாக்கெட்டை தொட்டுப்பார்க்க பணம் மொத்தத்தையும் காணோம். சற்று விலகிக்கிடந்த பையில் இருந்த குறைந்த பணத்தையும் காணோம். ஆஹா மொத்த பணத்தையும் காணமே இருக்கிற பிரட்சனையிலே இது வேறயா என்று அலுத்துக் கொண்டேன். என்னுடைய பதட்டத்தை அவர் ஒருவாறாக புரிந்து கொண்டார்.

உடனே இங்கிருந்து புறப்படு, இனி நீ இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது. அதிகாலையில்தான் திருடர்கள் அதிகம்பேர் உலாத்து வார்கள். நீ புறப்படு என்று என்னை கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக தள்ள ஆரம்பித்துவிட்டார். நானும்



எனது பையை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நடக்க ஆரம்பித்தேன்.

கொஞ்சதூரம்தான் தார் சாலை இருந்தது. அதற்குப்பின் ஊரும் இல்லை, சாலையும் இல்லை. எந்தப்பக்கம் செல்வது என்று தெரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்தேன். அரைமணி நேரம் போயிருக்கும். ஒரு வயதான பெரியவர் இரண்டு ஆடுகளை ஓட்டிக்கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். நான் அவரிடம் எனக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் எங்கே போகின்றீர்கள் என்று கேட்டேன்.

அவர் என்னையும் என் பையையும் மாறி மாறிப் பாரத்தவர் சற்று மிரட்சியுடன் நாராயண்காவ் என்றார். என்ன நாராயண்காவ்வா என்றேன் அதிர்ச்சியுடன். அப்பொழுது இந்த ஊர் நாராயண்காவ் இலலையா? என்றேன் இல்லை இது காலம்ப் என்ற ஊர் நாராயண்காவ் இன்னும் ஆறு கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது என்றார்

அவர். நான் உடனே அவரிடம் நானும் உங்கள் கூட வரவா என்றேன்.

என்னை மேலும் கீழும் பார்த்த வர் வா என்றபடி ஆடுகளை ஓட்டிக்கொண்டு முன்னே செல்ல ஆரம்பித்தார். என்னால் அவரின் வேகத்திற்கு நடக்க முடியவில்லை. நடந்து பழக்கமில்லாததால் காலில் கொப்புளங்கள் வந்துவிட்டது. கால் வலிவேறு. வேறு வழியில்லை. வலியை பொறுத்துக் கொண்டு அவரின் வேகத்திற்கு அவரின் பின்னாலேயே நடந்தேன்.

ஆட்டை ஓட்டிக்கொண்டு நடுநிசிலே ஏன் நாராயண்காவ்க்கு போறீங்க என்றேன் நான். ரம்ஜான் வருதில்லையா? காலையிலே நாராயண்காவ்ல ஆட்டு சந்தை அதான் சீக்கிரம் போனா நல்ல விலை கிடைக்கும்.என்றார். சரி உன் கதை என்ன என்றார் பெரியவர். நான் பழயபடி சீரடிஞ் பாபா யாத்ரா என்றவுடன், தே! தே! என்றவாறு ஆடுகளை நோக்கி சப்தமிட்டவாறு வேகமாக ஓட்ட ஆரம்பித்துவிட்டார்.

நான் அதற்குப்பின் அவரிடம் பேசவில்லை. இருந்த பணம் எல்லாம் திருடு போய்விட்டது. இனி உணவிற்கு என்ன செய்வது, சீரடியில் தங்க வேண்டுமே அதற்கு என்ன செய்வது என்று சிந்திக்க ஆரம்பித்துவிட்டேன். பணத்திற்கு என்ன செய்வது என்று மனம் ஓடிக்கொண்டிருக்க கால்கள் பெரியவரின் பின்னால் ஓடிக்கொண்டிருந்தது.

மெல்ல பொழுது விடிய ஆரம்பித்து விட்டது. நகரமும் இல்லாமல், கிராமமும் இல்லாமல் ஒரு ஊரை நோக்கி நாங்கள் நடந்து வந்தோம். பெரியவர் என்னை நோக்கி இதுதான் நாராயண்காவ் என்று கூறிவிட்டு திரும்பிப் பாரக்காமல் வேறு பாதை யில் ஆடுகளை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்.

அடடா, நேற்று சோற்றை பார்த்து ஆசைப்பட்டு என்னவெல்லாம் நடந்துவிட்டது. சாப்பிட்டுவிட்டு சற்று தூங்கிவிட்டதால் நடந்துவந்த தூரத்தை கணக்கிடுவதில் சற்று கோட்டை விட்டுவிட்டோம். இருட்டிவிட்டதால் காலம்ப் என்ற ஊரை நாராயண்காவ் என்று தவறாக நினைத்து உறங்கிவிட்டதால் என் பணம் எல்லாம் திருடு போய்விட்டது.

ராமலிங்க சுவாமி மெனக்கெட்டு காவலர்களிடம் கூறிவிட்டதை சரியாக பின்பற்றாமல் போய்விட்டோமே! என்று பலவாறாக யோசித்தேன். இறுதியாக கோபர்கான் அருகில் இருக்கும் ஸ்ரீராம்பூர் என்ற ஊரில் இருக்கும் எனது பழைய வியாபார புரோக்கர் ஒருவர் எனக்கு பணம் தரவேண்டும் அவரது ஞாபகம் வந்தது உடனடியாக ஒரு டெலிபோன் பூத்தில் இருந்து அவருக்கு போன் செய்து நான் இன்னும் இரண்டு நாளில் சீரடி வருகிறேன். பணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறி வைத்தேன்.

சற்றுதூரத்தில் நாராயணகாவ் பேரூந்து நிலையம் கண்ணில் பட்டது. அதற்குள் சென்று காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, வெளியே வந்தேன் குளிர் சற்றுஅதிகமாகவே என்னை நடுங்கவைத்தது. ஒரு டீ குடிக்கலாம் என்றால் அதற்குகூட என்னிடம் பணம் இல்லை. "பாபா இதென்ன சோதனை என்னை கண் பாரப்பா" என்று முதல்முறையாக பாபாவிடம் எந்தவிதமான தடையுமின்றி வேண்டுதல் வைத்தேன்.

– (தொடரும்)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

அடியாருக்கு அடியார்

அப்பூதி அடிகள்

இறைவனுக்கு தொண்டு செய்த அப்பரை மனதால் குருவாகக் கொண்டு சிவபதத்தை அடைந்தவர் அப்பூதி அடிகள். இறைவனுக்கு தொண்டு செய்பவரும், அந்த இறையடியாருக்கு தொண்டு செய்யும் அன்பரும் சமமே என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் அப்பூதி அடிகள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அப்பூதி அடிகள் இருபத்தைந்தாவது நாயன்மாராகப் போற்றப்படுகிறார். அப்பரும், (அப்பர் என்பது திருநாவுக்கரசு நாயனாரின் இன்னொரு பெயராகும்.) அப்பூதி அடிகளும் சம காலத்தவர்கள்.

அப்பூதி அடிகள் சோழவள நாட்டில் திங்களூரில் வாழ்ந்து வந்தார். திங்களூர் நவகிரக தலங்களில் சந்திரனின் தலமாகப் போற்றப்படுகிறது. திங்களூரில் வீற்றிருக்கும் சிவ பெருமானை வேண்டியே, நாவுக்கரசர் பாம்பு கடித்து உயிர் துறந்த அப்பூதி அடிகளின் மகனை உயிர்ப்பித்து எழச் செய்தார்.

சிவனடியாருக்கு தொண்டு செய வதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார் அப்பூதி அடிகள். ஆதலால் சிவனடியார்களை வரவேற்று உபசரித்து அவர்களது தேவைகளை முகம் கோணாது செய்து வந்தார். அப்போது ஒரு சமயம் சமண சமயத்தின் மீது பற்று கொண்டு, அச்சமயத்திற்கு மாறிய



அப்பூதியடிகள் நாயனார்
தை - சதயம்

தான் குருவாகக் கருதிய திருநாவுக்கரசரின் பெயரிலேயே சிவனடியார்களுக்கும், மக்களுக்கும் திருத்தொண்டுகள் பல புரிந்து வந்தார். அப்பூதி அடிகளைப் போலவே அவருடைய மனைவியாரும், பிள்ளைகளும் அப்பரின் மேல் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.



ஒருநாள் திருநாவுக்கரசு நாயனார் பல திருத் தலங் களை வழிபட்டுவிட்டு திருப்பழனத்தை என்ற தலத்தை தரிசிக்கச் சென்று கொண்டிருந்தார்.

செல்லும் வழியில் திங்களூர் எனும் ஊரில் வழிப்போக்கர்கள் கூட்டமாக தண்ணீர்ப் பந்தல் ஒன்றின் முன்னால் நின்று கொண்டிருந்தனர்.

நாவுக்கரசரும் தண்ணீர் குடிக்க வேண்டி அத்தண்ணீர்ப் பந்தலை அணுகினார். அப்பந்தலில் வழிப்போக்கர்கள் ஓய்வெடுக்க மணலை நிரப்பி தண்ணீரைத் தெளிந்து வைத்திருந்ததோடு, அருந்துவதற்கு சுவையான குடிநீரும் இருந்தது.

வெயிலில் வருவோர் சுவையான குடிநீரினை அருந்தியதோடு அப்பந்தலின் குளிர்ச்சியால் சிறிது நேரம் இளைப்பாறியும் சென்றனர். ஆதலால்தான் அப்பந்தலில் கூட்டம் நிரம்பி வழிகிறது என்பதை அப்பர் அறிந்து கொண்டார்.

அப்பந்தலில் தண்ணீர் அருந்திய அப்பர் 'திருநாவுக்கரசு தண்ணீர் பந்தல்' என்று பெயரிட்டு இருப்பதைக் கண்டு ஆச்சர்யமுற்றார். அங்கிருந்தோர்களிடம் இப்பந்தலை யார் நடத்தி வருகிறார்கள்? என்று கேட்டார்.

அவர்கள் அதற்கு "இவ்வூரில் உள்ள அப்பூதி அடிகள் என்பவர் சிவனடியார்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் பயன்படும்படி திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தலை அமைத்திருக்கிறார். இதுமட்டுமின்றி தான் அமைத்த சாலைகள், சோலைகள், குளங்கள், திருமடங்கள் ஆகியவற்றிற்கும் திருநாவுக்கரசு பெயரினையே வைத்திருக்கிறார்." என்று கூறினர்.

இறையடியார்களுக்கு தொண்டு செய்யும் அப்பூதி அடிகள் ஏன் திருநாவுக்கரசர் என்ற பெயரில் செய்து கொண்டிருக்கிறார்? என்று எண்ணிய அப்பருக்கு அப்பூதி அடிகளைக் காணும் ஆர்வம் உண்டானது.

அதனை அங்கிருந்தோரிடம் தெரிவிக்கவே அவர்கள் அப்பரை அப்பூதி அடிகளின் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். தம் இல்லத்திற்கு சிவனடியார் ஒருவர் வந்திருக்கிறார் என்பதை அறிந்ததும் அப்பூதி அடிகள் விரைந்து வந்து அப்பரை வரவேற்றார்.

"தாங்கள் என் இல்லத்துக்கு எழுந்தருளியதற்கு நான் என்ன தவம் செய்தேனோ? இச்சிறியேனால் தங்களுக்கு ஆவது ஏதேனும்



உண்டோ?" என்று கேட்டார் அப்பூதியார்.

அப்பர் பெருமான் "நான் திருப் பழனத்தில் இருக்கும் இறைவனாரைத் தரிசிக்க செல்லும் வழியில் தாங்கள் அமைத்திருந்த தண்ணீர்ப் பந்தலைக் கண்டேன். வேறு பல தர்மங்களையும் தாங்கள் செய்து வருவதாகக் கேள்விப்பட்டு தங்களைக் காண வந்தேன். ஒரு சந்தேகம்?" என்றார்.

"என்ன?" என்றார் அப்பூதியார்.

"தாங்கள் சிவனடியார்களுக்கு பயன்படும்படி அமைத்திருக்கும் தண்ணீர்ப்பந்தலுக்கு தங்களின் பெயரினை வைக்காமல் வேறு யாரோ ஒருவர் பெயரினை வைத்துள்ளீர்களே. என்ன காரணம்?" என்றார் அப்பர்.

இதனைக் கேட்டதும் "அப்பர் சுவாமிகளின் பெருமையை அறியாமல் இச்சிவனடியார் யாரோ என்று பேசுகிறாரே?" என்று எண்ணியபொழுது அப்பூதியாருக்கு பெரும் கோபம் உண்டாயிற்று.

"நீங்கள் சொல்வது நன்றாக இல்லையே! சமணர்களின் பேச்சுக்களைக் கேட்டு இன்னல் செய்த மன்னரின் சூழ்ச்சிகளை, திருத் தொண்டின் வலிமையால் இறையருள் பெற்று வென்ற திருநாவுக்கரசரின் திருநாமத்தையா வேறு யார் பெயரோ என்று கூறுகிறீர்கள்?

இறைவனின் திருநாமத்தின் வலிமையால் மறுமையில் இன்பம் கிடைப்பது மட்டுமல்லாமல், இம்மையிலும் தீங்கு நீக்கி நலம் பெறலாம் என்பதை எல்லோருக்கும் உணர்த்திய திருநாவுக்கரசரின் பெயரினை எழுதியிருக்க, நீங்கள் என்ன வார்த்தைகள் சொன்னீர்கள்?

கல்லைக் கட்டி கடலில் இட்ட போதும் இறையருளால் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய அந்தப் பெருமானாரின் பெருமையை உலகமே அறியும். சிவனடியாராக இருக்கும் தாங்கள் இவ்வாறு கேட்பது ஆச்சர்யமாக உள்ளதே! தாங்கள் யார்?" என்று படபடப்புடன் கேட்டார் அப்பூதியார்.

அப்பரடிகள் அப்பூதி அடிகளின் உள்ளக் குறிப்பையும், அவருள்ள பக்தியையும் அறிந்து கொண்டார். "வேறு சமயத்திலிருந்து மீண்டு வருவதற்காக இறைவன் அருளிய சூலை நோயால் ஆட்கொள்ளப்பட்டு, மீண்டும் அவனை அடைந்து உய்ந்த அறிவிலாச் சிறியேன் அடியேன்" என்று பணிவாகச் சொன்னார் அப்பர்.

அதனைக் கேட்டு வந்திருப்பது திருநாவுக்கரசர் என்பதை உணர்ந்ததும் அப்பூதி அடிகள் மெய் மறந்தார். கைகளை தலைமேல் குவித்து,

கண்களில் நீர் பெருக, உடல் சிலிர்க்க அப்பரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

அப்பரும் அப்பூதியாரை வாரி எடுத்து வணங்கினார். அதனைக் கண்டதும் அப்பூதியடிகள் ஆடினார் பாடினார் ஓடினார். தம் மனைவி, மக்கள், சுற்றத்தார்கள் எல்லோரையும் அழைத்து வந்து திருநாவுக்கரசரின் வருகையை அறிவித்து அவர்களை வணங்கச் செய்தார்.

அப்பரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று தகுந்த ஆசனத்தில் அமர்த்தி திருவடிகளைக் கழுவிய நீரை தலையில் தெளித்துக் கொண்டார். தங்களுடைய வீட்டில் திருவமுது செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர் அப்பூதி குடும்பத்தினர்.

நாவுக்கரசரும் அதற்கு சம்மதம் தெரிவித்தார். திருவமுது தயராவதற்குள் திங்களூர் இறைவனை வழிபட்டு வருகிறேன் என்று கூறி ஆலயம் நோக்கிச் சென்றார் அப்பர்.

அப்பூதியாரின் துணைவியார் பல்வேறு சுவைகளில் திருவமுதினைத் தயார் செய்தார். அப்பரடிகள் திருவமுது செய்வதற்காக தகுந்த வாழையிலை யினை அரிந்து வருமாறு தன்னுடைய மகன் மூத்த திருநாவுக்கரசை அனுப்பினார்.

தோட்டத்திற்குச் சென்ற சிறுவனான மூத்த திருநாவுக்கரசு இளம் வாழைக்குருத்தினை அரியும் போது, அதில் மறைந்திருந்த பாம்பு ஒன்று அவன் கையைத் தீண்டியது.

தன்னால் அப்பரடிகள் திருவமுது செய்யும் நேரம் தாமதிக்கப்படக்கூடாது என்று எண்ணி, அச்சிறுவன் அரிந்த வாழைக்குருத்தினை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு ஓடினான்.தன் அன்னையிடம் சென்று வாழைக் குருத்தினைக் கொடுத்துவிட்டு கீழே சுருண்டு விழுந்து இறந்தான்.

சிறுவனின் உடலின் நீலத்தன்மை மற்றும் கையிலிருந்த கடிவாயினைக் கொண்டு, பாம்பால் மூத்த திருநாவுக்கரசு மாண்டதை உணர்ந்த அப்பூதி அடிகள் மற்றும் அவர் தம் துணைவியார் செய்வது அறியாது திகைத்தனர்.

தங்களின் மகனின் மரணத்தைவிட அடியாரின் விருந்தோம்பல் முக்கியம் எனக் கருதி, அவனது உடலை பாயில் சுருட்டி ஓரிடத்தில் வைத்து விட்டு அப்பருக்கு திருவமுது செய்துவிக்கத் தயாராகினர்.



அப்பரடிகள் ஆலயத்தில் இருந்து திரும்பியதும் ஆசனத்தில் அமர்ந்து எல்லோருக்கும் திருநீறு அளிக்கத் தொடங்கினார். அப்போது அப்பரடிகள் அப்பூதியாரிடம் அவரின் மூத்த மகனை அழைக்குமாறு கூறினார். அப்பூதி அடிகளுக்கு துக்கம் தொண்டையை அடைந்தது.



எனினும் அடியாருக்கு திருவமுது செய்வித்தல் முக்கியம் எனக் கருதி "அவன் இப்போது உதவான்." என்றார்.

அதனைக் கேட்டதும் அப்பருக்கு மனதில் கலக்கம் உண்டானது. மீண்டும் அச்சிறுவனை அழைக்குமாறு அப்பூதியாரிடம் அப்பரடிகள் தெரிவிக்க, இனிமேலும் மறைக்க இயலாது என்பதை உணர்ந்த அப்பூதியார் சிறுவன் மாண்ட செய்தியை அப்பருக்குத் தெரிவித்தார்.

அதனைக் கேட்ட அப்பரடி கள் மாண்ட சிறுவனின் உடலி னை திருக் கோவிலுக்கு கொண்டுவ ருமாறு கட்டளையிட்டு ஆலயத் திற்கு விரைந்தார். திங்களூர் பெரும ானாரிடம் 'ஒன்று கொலாம்' என்ற திருப்பதிகத்தைப் பாடி உருகி வேண்டினார். இறையருளால் மாண்ட அச்சிறுவன் உறங்கி எழுவது போல் எழுந்தான். அப்பரை வணங்கிய அவனுக்கு திருநீறு அளித்தார் திருநாவுக்கரசர்.

"இவனால் அடியாருக்கு திருவமுது உண்பிக்க நேரமானாது" என்று அப்பூதி தம்பதியர் வருத்தத்துடன் கூறினர்.

அதனைக் கேட்டதும் அப்பரடிகள் விரைந்து சென்று அப்பூதியாரின் இல்லத்தில் அங்கிருந்தாரோடு திருவமுது செய்தார்.

சில காலம் அப்பூதியாரின் இல்லத் தில் தங்கியிருந்த அப்பரடிகள் பின்னர் திருப்பழனம் என்னும் திருத்த லத் திற்குச் சென்றார். அத்தலத்தில் திருப்பதிகம் பாடும்போது இறுதி பாடலில் 'அஞ்சிபோய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்' என்று பாடி அப்பூதியாரைச் சிறப்பித்துள்ளார்.

அதன் பின்னர் அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைப் போற்றி அறச் செயல்களில் வழுவாமல் நெடுங்காலம் வாழ்ந்து இறுதியில் வீடுபேறாகிய சிவபதம் பெற்றார்.

இறையடியாரகிய அப்பரும், இறை யடியாரின் அன்பராகிய அப்பூதியாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுகின்றனர்.

அரன் அன்பரும், அடியார் அன்பரும் வேறில்லை என்பது இதன் மூலம் புலனாகிறது. அப்பூதி அடிகள் நாயனார் குருபூஜை தை மாதம் சதயம் நட்சத்திரத்தில் வணங்கப்படுகிறது.

இறையடியாரை வணங்கினாலும் இறைப்பதம் பெறலாம் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டிய அப்பூதி அடிகளாரை சுந்தரர் திருத்தொண்ட தொகையில் 'ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்' என்று கொண்டாடுகிறார்.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும்

வெண்டைக்காய்

மூளை சுறுசுறுப்பாய் செயல்பட வெண்டைக்காய் சாப்பிடச் சொல்வார்கள். காரணம், இதில் உள்ள உயர்தரமான பாஸ்பரஸ் புத்திக் கூர்மையை அதிகரிக்கச் செய்கிறது!

மற்ற காய்கறிகளிலும் பாஸ்பரஸ் இருக்கிறது. குறிப்பாக, வெண்டைக்காயில் உள்ளதைவிட அதிக அளவில் இருக்கிறது. இருந்தாலும், இக்காயை ஏன் சிபாரிசு செய்கிறார்கள்?



உயர்தரமான பாஸ்பரஸுடன் ஒட்டிக் கொள்ளக்கூடிய ஒருவிதமான தாவர பசைப்பொருளும், நார்ப் பொருளும் வெண்டைக்காயில் உள்ளது. அத்துடன் அலுபொமினோ அமிலங்களும், எளிதில் இரத்தத்தால் உட்கிரகிக்கப்பட்டு சக்தியாக மாறும் மாவுச்சத்தும் வெண்டைக்காயில் உள்ளன.

கொலாஸ்டிரலைக் கரைக்கும் பெக்டின் என்னும் நார்ப்பொருளும் இதில் இருக்கிறது. இதயத்துடிப்பைச் சீராக்கும் மக்னீசியம் என்னும் பொருளும் இருக்கிறது. 100 கிராம் வெண்டைக்காயில் கிடைக்கும் கலோரி 66 ஆகும்.

மேற்கண்ட காரணங்களால் வெண்டைக் காய் முக்கியமான காய்கறியாகத் திகழ் கிறது. மரம் போன்ற நார்ப்பொருள், தாவரபசைப் பொருள் ஆகியவற்றால் தான் வெண்டைக்காய்ப் பச்சடி பசை போல் இருக்கிறது. வெண்டைக்காய் சேர்த்து தயாரிக்கப்பட்ட சாம்பார் குழம்பு முதலியவை தண்ணீராய் இல்லாமல் கெட்டியாய் இருக்கின்றன.


வெண்டையின் காய், இலை, விதை, வேர் ஆகிய அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிரம்பியவை. வெண்டைக்காயை உணவாக எடுத்துக் கொள்வதன் மூலம் கொலாஸ்டிரல் கரைந்து, மலச்சிக்கல் அகன்று குடல் சுத்தமாகிறது. மலச்சிக்கலும், வாய்நாற்றமும் அகலும்.

திருமண விருந்துகளில் சாப்பாடு உடனடியாகச் செரிமானம் ஆகத்தான் வெண்டைக்காய்களை மோரில் போட்டு மோர்க்குழம்பு தயாரித்துப் பரிமாறுகிறார்கள். வீட்டில் மலச்சிக்கல், காய்ச்சல் போன்ற வற்றால் யாராவது அவதிப்பட்டால், பிஞ் சான வெண்டைக் காய்களை மோர்க் குழம்பாகத் தயாரித்து, உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

பிஞ்சு வெண்டைக்காயில் தான் மருத்துவக் குணங்கள் அதிகம். அதனால் தான் பெண்கள் பிஞ்சுக் காயா என அறிய வெண்டைக்காய் நுனியை ஒடித்துப் பார்த்துக் கடைகளில் சேகரிக்கிறார்கள்!

சிறுநீர் நன்கு பிரியவும், உடலுக்குக் குளிர்ச்சியைத் தரவும், தாம்பத்திய வாழ்க்கையில் ஆர்வத்தைத் தூண்டவும் தோல் வறட்சியை நீக்கவும் உடம்மைப் பளபளப்பாக மாற்றவும் அரிய மருந்தாகவும் வெண்டைக்காய் திகழ்கிறது.

எனவே, புத்திக்கூர்மை அதிகரிக்க அனைத்து வயதினரும் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் இக்காயை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மினு மினுப்பான தோலையும் பெறலாம். சுறுசுறுப்பாகவும் வாழலாம்.



வெண்டைக்காயைத் தண்ணீர் ஊற்றிச் சமைக்க வேண்டும். வறுத்துச் சாப்பிடக்கூடாது. வயிற்றுப் போக்கைத் தீவிரமாய் குணப்படுத்தும் தன்மை வெண்டைக்காய் பச்சடிக்கு உண்டு.

வாத நோய்க்காரர்களும், உடல் பருமன் உள்ள எல்லா வயதுக் காரர்களும் வெண்டைக்காயை அவசியம் தவிர்க்க வேண்டும். முதிர்ந்த வெண்டைக்காயில் சத்துக்கள் இல்லை. அமெரிக்காவிலுள்ள பல மாநிலங்களிலும் இன்னும் சில நாடுகளிலும் வெண்டைக்காய் விதையை காபிப்பொடியாகப் பயன்படுத்துகிறார்கள்.

இளம் வெண்டைப் பிஞ்சுடன், சர்க்கரை சேர்த்து, சாறுபோல் தயாரித்து அருந்தினால் இருமல், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலியவை தணியும்.

கிழக்கத்திய நாடுகளில் கட்டி, வீக்கம் புண் முதலியவை குணமாக வெண்டைக்காய்ச் செடியின் இலைகளையும், இளம் பிஞ்சுகளையும் மெல்லிய துணியில் வைத்து, குறிப்பிட்ட இடங்களில் கட்டுகிறார்கள். இதனால் கட்டி, வீக்கம் முதலியவையும் குணமாகின்றன.

இச்செடியின் வேரைக் காயவைத்துப் பொடியாக்கிப் பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் தம்பதியருக்கு தாம்பத்திய உறவில் நாட்டம் ஏற்படும். ஆண்களின் ஆண்மையும் பெருகும்.

ஆண்டு முழுவதும் பயிராகும் இக்காயின் தாயகம் ஆப்பிரிக்கா. கிழக்குப் பிரதேசத்தில் தோன்றிய இக்காய் மேற்குப் பிரதேசத்தில்தான் அதிகம் பயிர் செய்யப்படுகிறது.

சமைத்தோ, ஊறுகாய் போட்டோ, பதப்படுத்தி டின்களில் வைத்திருந்தோ பல நாடுகளில் இக்காயைச் சாப்பிடுகின்றனர்.

'புரோடோபிளாசம்' என்னும் திரவத்தில் நமது உயிரணுக்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. இத்திரவத்தில் முக்கியமாய் இடம் பெற்றுள்ளது பாஸ்பரஸ். இது இரத்தத்தைத் திரவ நிலையில் வைத்திருக்க உப்புச்சத்துடன் பயன்படுகிறது. உயிரணுக்களையும் குறிப்பிட்ட வடிவமைப்பில் தொடர்ந்து இருக்கவும் பயன்படுகிறது.

எனவே, உயர் தரமான பாஸ்பரஸ் அடங்கியுள்ள வெண்டைக்காய் என்னும் இனிமையான காய்கறிக்கும் உணவில் முக்கியத்துவம் கொடுங்கள். உடல் நலத்துடன் வாழுங்கள்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

தொடர் –24

சாய் சரவணன்

"அதி தேவதை"

நம் சாயிநாதரை நாம் அனைவரும் ஒவ்வொரு விதமாக காண்கிறோம். இறைவனாக, சற்குருவாக, தாயாக, தந்தையாக, அனைத்தும் அறிந்த அந்தர்யாமியாக, பகவானாக, குருவாக, காண்கிறோம். சாயிநாதரோ, நம் மனதை நன்கறிந்து நாம் எந்த பாவத்தில் வணங்குகிறோமோ, அந்த பாவத்திலேயே நமக்கு தன் அருள் மழையைப் பொழிகிறார்.

பாபாவின் மிக நெருங்கிய பக்தர்கள் கூட பாபாவின் மனதை அறிந்து செயல்படும் பக்குவம் அற்றவர்களாகவே இருந்தனர். ஆனால் பாபா தன்னை நாடிவரும் பக்தர்களின் மனதைப் படித்து அவர்களுக்கு உதவி புரிவார். அப்பேர்பட்ட இறைவனான சாயிநாதரின் மனதை படித்து அவர் கூறுவதற்கு முன்பே அவர் ஆணையை செயல்படுத்தும் ஆற்றல் ஸ்ரீ ராதாகிருஷ்ணமாயிக்கு மட்டுமே இருந்தது.

அதை மெய்பிக்கும் லீலை ஒன்றை வாசிப்போம். சீரடியில் அன்னை அன்னதான சேவையை தொடங்கிய காலம் அது! ஒருநாள் சீரடியில் சாயிநாதரை தரிசனம் காண அறுபது பேர் கொண்ட குழுவினர் வந்தனர். அவர்கள் அனைவரும் வெகு தூரத்தில் இருந்து பயணித்து வந்திருந்ததனால் மிகுந்த பசியில் இருந்தனர்.

இருப்பினும் பசியைப் பொருட்படுத்தாது, பாபாவை தரிசனம் செய்தனர். தன்னைக்காண வந்த பக்தர்களின் பசியைப் புரிந்து கொண்ட



பாபா, அங்கிருந்த பக்தர் ஒருவரை அழைத்து, ஆயி வீட்டிற்குச் சென்று "உணவு தயாராகிவிட்டதா" என்று பார்த்து வா என்றார். பாபாவின் செய்தியை தாங்கிச் சென்ற நபரோ, பக்தர்கள் இப்போதுதான் வந்தார்கள். அன்னைக்கு உணவு தயாரிக்கச் சொல்லி செய்தி அனுப்பவில்லை. பிறகு எப்படி பாபா உணவு தயாராகிவிட்டாதா என்று பார்த்துவா என்கிறார். என்ற சந்தேகத்துடன் சாலாவிற்குச் சென்றார்.

ஆனால் அங்கே அவன் அற்புதக் காட்சியைக் கண்டான். பாபாவின் பக்தர்களுக்குண்டான உணவினை தயாரித்துவிட்டு பரிமாறுவதற்காக

அன்னை தயாராக இருந்தாள். அவனைக்கண்டதும் அன்னை, பாபாவிடம் சென்று உணவு தயாராக இருக்கிறது என்று கூறி அனைவரையும் அழைத்து வாருங்கள் என்று கூறினாள்.

இதென்ன அதிசயம், பக்தர்கள் வருவதற்கு முன்பே அன்னை உணவு சமைத்து வைத்திருப்பதும், பாபாவோ உணவு தயாராகிவிட்டதா என்று பார்த்து வரச்சொல்வதும், என வியந்து போனவன் பாபாவிடம் வந்தான். பாபாவோ அவனைக் காண்பதற்கு முன்பே, அங்கு குழுமியிருந்த பக்தர் களிடம், சாலாவில் உணவு தயாராக இருக்கிறது. அனைவரும் எழுந்து சாப்பிடச் செல்லுங்கள் என்றார்.

அன்னை கூறியதை பாபாவிடம் கூறுவதற்கு முன்பே பாபாவே அதைக்கூறுகிறாரே! இங்கு என்னதான் நடக்கின்றது. சரி நடப்பதை வேடிக்கை பார்ப்போம். என்றவாறே அனைவரையும் சாலாவிற்கு அழைத்துச் சென்றான்.

சாலாவில் ஏற்கனவே இலை கள் போடப்பட்டு, குடிக்க நீர் வைக் கப்பட்டு உணவு பரிமாற தயாராக இருந்தது. பக்தர்கள் அனைவரும் வரிசையாக அமர்ந்ததும் ஒரு இலை மட்டும் மிச்சமிருந்தது. பக்தர்களின் எண்ணிக்கையை சரியாக கணித்து அன்னை இலை போட்டிருந்தாள்.

ஆனால் அதில் ஒரு இலை மட்டும் கூடுதலாக இருப்பதைக் கவனித்த அன்னை பாபாவின் பக் தனைக் கண்டாள். அந்த இலை உங்களுக்கானதுதான். பாபா உங்க ளையும் இங்கேயே இவர்களுடன் உணவருந்தக் கூறுகிறார் என்றாள். அடுத்த கணமே பாபா அனுப்பிய பக்தர் பாபாவும், அன்னையும் மனதாலேயே செய்திகளைப் பரி மாறிக்கொண்டு இத்தகைய லீலை களைப் புரிகின்றனர். என்பதனைப் புரிந்து கொண்டு உடனடியாக இலை யின் முன்னால் அமர்ந்து கொண்டு தானும் உணவு உட்கொண்டார்.

குருவின் மனதைப் படிக்கும் ஆற்றல் ஓர் சிறந்த பக்த சிரோன்மணியால் மட்டுமே முடியும். அன்னை சிறந்த பக்தை மட்டும் அல்ல. அவள் ஓர் தெய்வீக அவதாரம் என அவளை நன்கு அறிந்த "காகா சாகேப் தீட்சித்" கூறி இருக்கிறார். அன்னையின் ஆன்மீக குணங்களைக் கண்ட தீட்சித், "சாயி பக்திக்கு இவள் ஓர் ஆச்சார்யாள்" என்று பெருமைப் படுத்தினார்.

அன்னை தன் லட்சியத்தை செயல்படுத்த பாபாவின் சங்கல்பத்தால் பல உயர்ந்த மனிதர்களை சீரடிக்கு வரவழைக்க எண்ணம் கொண்டாள். ஒரு முறை நானா சாகேப் சாந்தோர்க்கர் பாபாவைக் காண சீரடிக்கு வந்தார். பாபாவை தரிசித்த பின்பு ஆயியின் பிருந்தாவனத்திற்கு வந்தார். நானாவைக் கண்ட ஆயி அவரை இன்முகத்துடன் வரவேற்று குடிக்க நீர் கொடுத்தாள்.

பின்பு ஆயி சீரடியில் பல சீர்தி ருத்தங்கள் செய்ய வேண்டும் அதற்கு பல பொருட்கள் வேண்டும். நீங்கள் பண்டரிபுரத்திலே இருக்கின்றீர்கள். அங்கே ஞானிகளின் மீது நம்பிக்கையற்ற சில நண்பர்கள் இருக்கின்றார்களே! அவர்களை சீரடிக்கு இழுத்து வந்தால் நன்மையாக இருக்கும் என்றாள்.

ஆயியின் கூற்றைக் கேட்ட நானா, பாபாவின் சங்கல்பம் அதுவாக இருப்பின் எதுவேண்டுமானாலும் நடக்கும் என்றபடி ஆயியிடம் விடை பெற்றுச் சென்றார்.

பண்டரிபுரத்திற்குச் சென்ற நானா ஆயி கூறியதை நினைவு கூர்ந்து தனது

நண்பர்களில் மிகவும் பிரியமான தாத்யா சாகேப் நூல்கரிடம் சீரடியைப் பற்றியும், சாயியின் லீலைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார். நூல்கரோ, பாபாவை மட்டும் அல்ல, வேறு எந்த ஞானியையும் நம்பமாட்டார். என்றாலும் நானா அவரை விடாமல் பாபாவின் தரிசனத்தைப் பெறுமாறு வற்புறுத்தினார்.

நானாவின் வற்புறுத்துதலை ஒரு முடிவிற்கு கொண்டுவர நூல்கர் நானாவிடம், நான் பாபாவிடம் இரண்டு கோரிக்கைகளை வைக்கிறேன். ஒன்று எனக்கு நல்ல பிராமண சமையல் காரன் ஒருவன் வேண்டும். இரண்டு பாபாவிற்கு நான் காணிக்கை அளிக்க நாக்பூர் ஆரஞ்சு பழங்கள் வேண்டும் இந்த இரண்டு கோரிக்கைகள் நிறைவேறினால் மட்டுமே சீரடிக்குச் செல்வதா, வேண்டாமா என்று முடிவு செய்வேன் என்றார்.

பாபாவின் லீலையால் இவை இரண்டும் உடனே நடந்து விடவே நூல்கர் தான் வாக்களித்தபடி சீரடிக்கு புறப்பட்டார். சீரடிக்குச் சென்று பாபாவைக் காண மசூதிக்குச் சென்றார். ஆனால் பாபாவோ நூல்கரை திட்டித்தீர்த்தார். பாபா திட்டிய வார்த்தைகள் தன் மனம் சார்ந்த எண்ண ஓட்டத்தை ஒத்ததாகவே இருந்ததை எண்ணி பாபாவின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார் நூல்கர்.

பாபா நூல்கரை ஆசீர்வதித்து, "உனக்கு நல்ல சமையல்காரனையும், ஆரஞ்சு பழங்களையும் நானே தந்து உனது கோரிக்கையை நிறைவேற்றி னோம் என்றார். நூல்கர் மனம் மகிழ்ச் சியில் துள்ளிக் குதித்தது.

இது 1908 நிகழ்ந்தது. அப்போது சாதே வாடா கட்டப்பட்டு புழக்கத்திற்கு வந்திருந்தது.


தாதா சாகேப் நூல்கர்

பாபா நூல்கரைப் பார்த்து, தாதா கேல்கருடன் சாதே வாடாவில் தங்கிக்கொள் என்றார். நூல்கரும் சாதே வாடாவில் தங்கினார். அங்கு பற்பல அனுபவங்களைப் பெற்று பாபாவின் மிகச்சிறந்த பக்தராக மாறினார்.

பண்டரிபுரத்தில் இருந்து சீரடிக்கே தனது வீட்டை மாற்றிக்கொண்டு பாபாவின் சேவையிலேயே தன் வாழ்நாளைக் கழித்தார். சீரடியில் குரு பூர்ணிமா விழா தொடங்க நூல்கர் மிக முக்கியமானவர். ஆயியின் சாயி சேவைக்கு நூல்கர் பல்வேறு விதங்களில் பெரும் உதவியாகவும் இருந்தார்.

காலம் செல்லச் செல்ல நூல்கர் நோய்வாய்ப்பட்டார். பாபாவின் அறி வுரையின்படி பாபாசாகேப் சகரஸ்புதே என்பவரும் வாமன் ராவும் அவரை கவனித்துக் கொண்டனர். நூல்கரின் இரண்டு மகனும், அவரது குடும்பத்தாரும், தீட்சித்தும் அவரை கவனித்துக் கொண்டனர்.

அவரது இளைய மகன் விஸ்வநா தன் தந்தையின் நிலை கண்டு

வேதனைப்பட்டு ஆயியிடம் ஓடி வந்தான். ஆயி அவனுக்கு ஆறுதல் கூறி பாபாவின் பாத தீர்த்தத்தையும் உதியையும் வழங்கி அனுப்பி வைத்தாள். விஸ்வநாதனும் பாபாவின் பாத தீர்த்தத்தை தன் தந்தையின் வாயில் மூன்று முறை ஊற்றி உதியை நெற்றியில் இட்டான். அடுத்த விநாடி நூல்கர் தன் உடலை உகுத்தார்.

அதே சமயம் பாபா மசூதியில், ஓஞ். நூல்கர் நம்மை விட்டுச் சென்று விட்டார். இனி அவர் மீண்டும் வரமாட்டார் எனக்கூறினார். பாபாவின் வாக்கு நூல்கர் முக்தியை அடைந்தார் என்பதைக் குறிக்கிறது.

நூல்கர் லெண்டித்தோட்டத்தின் அருகே தகன மேடையில் வைக்கப்பட்டிருந்த போது. அவரது உடலைப் பார்த்து ஆயி, எனது அன்பே! எனது குழந்தையே! போய் விட்டாயா, என்று அவரது தலையில் முத்தமிட்டுவிட்டு ஒருவரையும் திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டாள்.

மசூதியில் பாபா மிகுந்த கவலையில் இருந்தார். என் நூல்கர் வெளியேறிவிட்டார். அவர் இனி பிறக்கப்போவதில்லை. அவர் நல்ல மனிதர். இனி நானும் புறப்படுவேன் என்றார். அன்றில் இருந்து பாபா மூன்று நாட்களுக்கு காணாமல் போய்விட்டார். சீரடியில் பக்தர்கள் கவலை அடைந்தனர். மூன்றாம்நாள் காலையில் ஒரு பக்தர் அன்னையிடம் பாபாவைப்பற்றி கவலைப்பட்டு விசாரிக்க, அவரிடம் அன்னை கவலைப்பட வேண்டாம். பாபா நீம்காவனில் இருக்கிறார் என்று கூறினாள்.

உடனே பக்தர்கள் அனைவரும் நீம்காவன் சென்று பாபாவை மேள தாளத்துடன் சீரடிக்கு அழைத்து வந்தனர். அதில் ஆயியும் கலந்து கொண்டாள். மூன்றாம் நாள் நூல்கரின் அஸ்தி கோதாவரியில் நதியில் கரைக்கப்பட்டது.

– (தொடரும்)

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

சென்ற மாதம் மந்திரவாதியால் பாதிக்கப்பட்ட பாபாவின் பக்தர்களின் கதையை வாசித்தீர்கள் அல்லவா, ஆட்டை தொட்டு, மாட்டை தொட்டு கடைசியில் மனிதனைத் தொட்ட கதையாக, நம் குருவிற்கே செய்வினை செய்த கதையைக் கேளுங்கள்.

குருவின் ஆன்மீக வளர்ச்சியை பிடிக்காத உறவினர்கள் சிலர் ஒரு முறை ஒரு மந்திரவாதி கிழவியை அணுகி விபரத்தைக்கூறி, குருவிற்கு செய்வினை வைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

அவளும் குருவின் பின்புலன்களைப் பற்றி தன் தவத்தின் மூலம் ஆராய்ச்சி செய்திருக்கின்றாள். பின்பு ஒருநாள் எப்படியோ எங்களது முகவரியைத் தெரிந்து கொண்டு எங்களின் இல்லத்திற்கே வந்து விட்டாள். எனக்கோ அவளைக்கண்டதும் கைகால் உதற ஆரம்பித்துவிட்டது.

அவளோ, நான் சாய்ராமை பார்க்க வேண்டும் தம்பி இருக்கின்றாரா என்று பணிவுடன் கேட்டாள். நான் குருவிடம் தகவலை தெரிவித்தேன். குரு வந்து அவளை வரவேற்று என்ன செய்தி கூறுங்கள் என்றார்.

மந்திரவாதி கிழவி கூறினாள், தம்பி உங்களது உறவினர் சிலர் உங்களின் மீது மிகவும் பொறாமையில் இருக்கின்றார்கள். நீங்கள் தீய காரியங்களுக்கு துணை போவதாகவும், உறவினர்களை மதிப்பதில்லை என்றும், ஆதலால் உங்களுக்கு செய்வினை செய்யும்படி கூறினார்கள். நானும் அவர்கள் கூறுவது உண்மை என்று நம்பி உங்களின்மீது செய்வினையை ஏவுவதற்கு முயற்சி செய்தேன். ஆனால் என்னால் முடியவில்லை.

என்ன முயற்சித்தும் ஏதோ ஒரு தடை வந்து கொண்டே இருந்தது. ஒரு சில நாட்கள் யாரோ ஒரு பெரியவர் என் வீட்டிற்குள் கற்களையும் மணலையும் வீசி எறிந்து என்னை கடுமையான வார்த்தகளால் திட்டித் தீர்ப்பதுபோல் கனவு வந்தது. விழித்துப் பார்த்தால் உண்மையிலேயே என் வீட்டிற்குள் கற்களும், மணலும் கிடப்பதைக் கண்டேன்.



ஏன் என்று தெரிந்து கொள்வதற்காக உங்களின் பூர்வ சென்மத்தை ஆராய்ந்தேன். பதினெட்டு வயதில் நீங்கள் ஒரு விபத்தில் இறந்து விட்டதாகவும், பின்பு அரை மணி நேரத்தில் உங்களின் போன சென்மத்து குரு கஞ்சா சாமியாரின் அருளால் நீங்கள் மீண்டும் உங்களின் உடலுக்குள் புகுத்தப்பட்டதாகவும் அறிந்தேன்.

பதினெட்டு வயதில் உங்களுக்கு ஆன்மீகப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்த அப்போதைய குரு உங்களை உங்களின் இந்த சென்மத்து குருவிடம் சேர்க்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்து கொண்டிந்த போதுதான் எதிர்பாராத விதமாக அந்த விபத்து நேர்ந்ததாகவும்,

தான் ஒத்துக் கொண்ட பணியில் தடை வந்துவிடக்கூடாது என்பதற்காக உங்களது உயிரை மீண்டும் உங்களின் உடலினுள் செலுத்தியதாகவும் அறிந்து கொண்டேன்.

அவர் "சிறுமலைச்சித்தர் கஞ்சா சாமியார்" என்று அறிந்து வியந்து போனேன். காரணம் அவர்தான் எனக்கும் குரு. அவர்மூலம்தான் இது உங்களுக்கு இறுதி சென்மம் என்பதும் இனி உங்களுக்கு சென்மம் இல்லை என்பதையும் தெரிந்து கொண்டேன்.

மேலும் இந்த முடிவான சென்மத்தின் உங்களது குரு சற்குரு சாயிநாதர் என்பதையும் அறிந்து கொண்டேன். ஆகையால் என் முயற்சிகளை உடனடியாக கைவிட்டு விட்டேன்.

நான் உங்கள் உறவினர்களிடம் உங்களுக்கு செய்வினை செய்வதாக வாக்கு கொடுத்துவிட்டேன். என் வாக்கு பலிக்கவில்லை என்றால் ஊரில் யாரும் என்னை மதிக்க மாட்டார்கள். ஆகவே தயவு செய்து நீங்களே ஏதாவது செய்து என் வாக்கு பலித்ததைப்போல் மாயையை உருவாக்கி என்னை காப்பாற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டாள்.

குரு எதுவும் பேசாமல் மவுனமாக இருந்தார். அந்த கிழவி குருவிடம் நான் விடை பெற்றுக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். குரு அவர்களோ அப்போதில் இருந்தே மவுனமாக இருக்க ஆரம்பித்தார்.

அப்போது குரு அவர்கள் ஸ்ரீ சாய் எண்டர்பிரைசஸ் என்ற இயற்கை அங்காடி ஒன்றையும் நடத்திக்

கொண்டிருந்தார். ஒரு வாரமாக மவுனமாக இருந்தவர் எட்டாம் நாள் திடீரென அந்தக் கடையை காலிசெய்து வியாபாரத்தை மூடிவிட்டார்.

ஒன்பதாம் நாள் மவுனத்தை முடித்துக்கொண்டார். நான் அவரிடம் ஏன் கடையை மூடிவிட் டீர்கள் என்று கேட்டேன். குரு அவர்கள் கூட்டிகழித்துப் பார் கணக்கு சரியாக வரும் என்று கூறிவிட்டு சீரடிக்குச் சென்று விட்டார்.


நீங்களும் கூட்டிக்கழித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கொஞ்சநாள் சென்றது. உற வினர்கள் மீண்டும் தொல்லை கொடுப்பதற்காக மதுரை மாவட் டத்தில் உள்ள ஒரு சாமியாரை தொடர்பு கொள்கின்றனர். அவரும் அவராலான காரியங்களை செய்து விட்டு, உறவினர்களை கூப்பிட்டு, நீங்கள் எதிரியாக கருதுபவர் "பெரிய இடத்தில்" ஒரு பெரியவரின் பாதுகாப்பில் இருக்கிறார்.

அவருக்கு கெடுதல் செய்தால் நாங்கள்தான் பாதிக்கப்படுவோம் என்னால் முடியாது என்று கூறிவிட்டு குருவின் தொலைபேசி எண்ணை எப்படியோ கண்டுபிடித்து குருவிடம் தொடர்பு கொண்டு விபரத்தைக் கூறி உங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் பெரியவர் யார் என்று கேட்க,

குரு அவர்களோ, நீங்கள் கூறும் பெரியவர் யார், எனக்கு பாதுகாப்பாக இருக்கின்றாரா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

ஆனால் எனக்கு சீரடி சாயிபா பாவைத் தவிர வேறு யாரையும் தெரி யாது. எனது வாழ்விற்கும், தாழ்விற்கும் அவரே காரணம். அவரைத்தவிர என் வாழக்கையில் வேறொன்றுமில்லை



என்று கூறினார்.

குருவின் பேச்சு அவருக்கு மிகவும் பிடித்திருந்ததினால் தொடர்ந்து குருவிடம் பேசி வருகிறார். மேலும் தற்போது அவர் தீவிர சாயி பாபாவின் பக்தராகிவிட்டார் என்பதுதான் சாயி லீலை என்பது. ஒருமுறை குருவின் பால்ய நண்பர் ஒருவர் வெகுதூரத்தில் இருந்து குருவைப் பார்க்க வந்தார்.

முதலில் பழைய ஞாபகங் களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தவர்கள் பிறகு பேச்சு பாபாவைப் பற்றித் திரும்பியது. குரு அவர்கள் தான், சீரடி சாய்பாபாவைப் பற்றி ஒரு ஆன்மீக புத்தகம் ஆரம்பிக் கப்போவதாகவும், அதை சிறப்பாக தொடர்ந்து நடத்துவதுதான் தனது தற்போதைய லட்சியம் என்றும் கூறினார்.

நண்பரோ, என்ன பெரிய பாபா, பாபா என்கிறாய். அவர் ஒரு குக்கிராமத்தில் வாழ்ந்தவர்தானே! அவரைப்பற்றி எழுத என்ன இருக்கிறது. ஒரு பத்து மாதம் எழுதமுடியுமா? அப்புறம் என்ன செய்வாய்? பேசாமல்

பழையபடி திகில் கதை, சரித்திரக்கதை என்று எழுது. காசாவது கிடைக்கும்.

அதுதான் வாழ்கைக்கும் உதவும். அதைவிட்டு விட்டு பாபா பாபா என்று வாழக்கையை கெடுத்துக் கொள்ளாதே! என்று முடிந்தவரை குருவிற்கு தனது பால்ய நண்பர் என்ற முறையில் அறிவுரை கூறிச்சென்றார்.

ஐந்து ஆண்டுகள் சென்றது நமது சாயிமகராஜ் குருவைத்தேடி ஐம்பதாவது இதழ் வெளிவந்த சமயம் அதே பழைய நண்பர் குருவை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

சாய்ராம் நான்தான் பேசுகிறேன். தற்போது நான் திருச்சியில் இருக்கின்றேன். திருவெறும்பூரில் ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு உனது சாய் மகராஜ் குரு வைதேடி புத்தகத்தை பார்த்தேன். நன்றாக இருந்தது. ஐம்பது இதழ் வெளிவந்திருக்கின்றது. வாழ்த்துக்கள். நான் உன்னிடம் பாபாவைப் பற்றி பேசியதை வாபஸ் வாங்கிக்கொள்கின்றேன்.

ஏனென்றால் இப்போது என் வாழ்க்கையில் பாபாவைத் தவிர வேறு ஏதும் இல்லை. நானும் இப்போது பாபாவின் தீவிர பக்தனாகிவிட்டேன்.

பாபாவிற்கு எப்படி பக்தனானேன் என்று எனக்கே தெரியவில்லை. ஆனால் பாபா இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை. எனது ஒவ் வொரு அசைவையும் பாபாவே நகர்த்துகிறார். அவரே என்னைப் பாதுகாக்கின்றார். நான் மட்டுமல்ல என் குடும்பமே தற்போது பாபாவின் பக்தராகிவிட்டோம்.

விரைவில் நானும் எனது குடும்பத்தாரும் உங்களுடன் சீரடி வந்து சாயிநாதரை தரிசிக்க வேண்டும் என்று அனைவரும் சென்ற முறை 9 வது சீரடி புனித யாத்திரையில் பங்கு கொண்டு சாயிநாதரை தரிசித்து வந்தனர் என்பது சாயிலீலைத் தவிர வேறென்ன?

– (தொடரும்)

உண்மையான குரு!

இன்றும் கூட தெய்வ தரிசனமும் தன்னை அறிதலும் ஆகியவற்றை உண்மையான அனுபவமாக உணர்ந் தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உலகில் இங்குமங்கும் செல்வதும், தங்களை தொடர வேண்டி சீடர்களை சேர்ப்பதும் இல்லை.

அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து விலகி மிகவும் அமைதியாக சாதனாவில் ஈடுபட்டிருக்கிறார்கள். அம்மாதிரி ஒருவரை நீ பார்க்க நேர்ந்தால், அவரை உனக்கு வழிகாட்ட கோரினாலும், அவருக்கு உன் மீது எந்தவிதமான சிரத்தையும் இராது.

இப்போது உலகில் உலாவி வரும் குரு ஒருவரின் வாழ்க்கையை கூர்ந்து நோக்கினால், அவருக்கு விருப்பங்களும் பிரச்சினைகளும் இருப்பது தெரியவரும். அவருடைய ஞானம் புத்தகங்களிலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பெறப்பட்டதாகும். தெய்வத்தைப் பற்றி பேசும் அவருக்கு, முழுமையான உண்மையான தெய்வ அனுபவம் கிடையாது. உன்னை போலவே அவர்களும் சம்சாரம் என்ற சேற்றில் சிக்கியவர்கள்.

அவர்கள் உன்னை உறுதியான தரைக்கு எப்படி இழுக்க முடியும்? இந்த நாட்களில் சாயிபாபா ஒருவனே உண்மையான சற்குரு. அவரை அழைத் தால் அவர் உனக்கு வழி காட்டுவார். அவர் உனக்கு உதவ, உன்னை காக்க, உனக்கு வழிகாட்ட, தயாராக உன் இதயத்தில் இருக்கிறார்.

ஸ்ரீ சமர்த்தர் புத்தகம் சமர்ப்பண விழா

கலியின் கோரப் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நமக்குக் கிட்டிய சத்சங்கம் "சுவாமி சமர்த்தர்" மகாராஷ்டிர மாநிலம் சோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள அக்கல்கோட் என்ற திருத்தலத்தில் 1856 ல் இருந்து 1878 வரை தொடர்ந்து 22 ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு அருள்பாலித்து சமாதியடைந்து, சமாதிக்குப் பின்னரும் அடியவர்களுக்கு அருட்காட்சி தந்தருளும் ஞானக்கதிரவன் சுவாமி சமர்த்த மகராஜ்.

சுவாமி சமர்த்தர் அருளிய அற்புதங்களில் இருந்து தொகுக்கப் பட்ட இரத்தினங்கள்தான் இக்காவியம். பலர் பலவிதங்களில் சமர்த்தரின் லீலைகளை தொகுத்திருக்கிறார்கள்.

இருப்பினும், பூர்வ புண்ணிய பலன்களால், குருவின் அனுகிரகத்தை பரிபூரணமாக பெற்று, தன் அகநோக்கு சிந்தனையில் தேடுதல் உள்ளவரான அன்புச்சகோதரி திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களால் சமர்த்தரின் பல்வேறு நூல்களையும், வரலாற்று ஆவணங்களையும் ஆராய்ந்து முழுமையாக தமிழில் எழுதப்பட்டதே இக்காவியம்.

ஆசிரியர் அவர்கள் வயதில் சிறியவ ராயினும், மிகப்பெரிய காரியத்தினை சாதித்துள்ளார். இப்புனித நூலினினை வாசிக்க, வாசிக்க, நம்முடைய துன்பங்கள் எல்லாம் கரைந்தோடுவதை நம்மால் உணர முடியும். ஸ்ரீ சமர்த்தர் நம் கைகளைப் பிடித்துக் கொண்டு ஞான மார்க்கத்திற்கு அழைத்துச் சென்றுவிடுகின்றார்.



சுவாமி சமர்த்த மகாராஜின் பரிபூரண அருட்கடாசத்தினால் தமிழில் தொகுக்கப்பட்ட அக்கல்கோட் ஸ்ரீ சமர்த்த லீலாம்ருதம் எனும் புண்ய சரித்திரம் ஸ்ரீ மாதங்கி பாலாஜி அவர்களால் கடந்த 30.5.23 அன்று மாருதிபுரம் ஸ்ரீ குரு தத்த பாதுகா சேத்திர ராஜ்யத்தில் நடந்த விழாவில் பக்த கைங்கரியமாக வெளியிட்டு இக்காவியத்தை சமர்பணம் செய்தார்.

இப்புனித நூலின் மேன்மையையும், சக்தியையும் வர்ணிக்க அடியேனால் முடியவில்லை. படிப்பவர் அவரவர்கள் தாமே இவ்வமிர்தத்தை உண்டு உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.



முதல் பக்கத்தில் இருந்து கடைசி பக்கம் வரை பேரின்ப பெரு வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதை வாசிப்பவர்களே உணர்ந்து கொள் வார்கள்.

இக்காவியம், ஞான மார்க்கி களுக்கு சுடர்விட்டு ஒளிரும் ஒளி விளக்காகவும், பக்தி மார்க்கி களுக்கு மானச பூஜையாகவும் திகழும் என்பதில் எள்ளவும் அய்ய மில்லை. ஞானப்பசி எடுத்த புண்ணி யவான்களே! அன்பிற்குரிய திவ்ய மூர்த்தியாகிய சுவாமி சமர்த்தரை காணுவோமா என்று தவம் செய்யும் பக்தி மான்களே! இக்காவியத்தை அனுதினமும் பாராயணம் செய்து, சமர்த்தரின் அருள் நோக்கிற்கு ஆளாகுங்கள், பிறவிப்பயனைப் பெற்று வாழுங்கள்.

புத்தகம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

திரு.சுந்தர் சாய்ராம்,
போன்: 97894 04451.
திருமதி. மாதங்கி பாலாஜி,
போன்: 99422 19947.

ஜய ஜய ஸ்ரீ சுவாமி சமர்த்த!



சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, அருள்மிகு. மௌன சாது பால ஞான சுவாமிகளின் சீவ பீடத்தை. வாருங்கள் சித்தரை தரிசனம் செய்து அவரது வரலாற்றினை அறிந்து கொள்வோம்.

மௌன சாது பால ஞான சுவாமி



"எல்லாம் கொஞ்ச காலம்" என்று தன் பக்தர்களிடம் அடிக்கடி கூறும் மகான் ஸ்ரீ மௌன சாது பால ஞான சுவாமிகள் 1934 ஆம் ஆண்டு திருவெண்ணைநல்லூர் அருகில் உள்ள மழையம்பட்டு என்ற கிராமத்தில் வசித்து வந்த மொட்டையன், குள்ளம்மாள் என்ற தம்பதியினருக்கு ஒன்பதாவது குழந்தையாக அவதரித்தார்.

இவருக்கு முன் பிறந்த எட்டு குழந் தைகளும் இறந்துவிட, இவரது பெற்றோர்

இவர் பிறந்ததும், ஊர் பெரிய மனிதர்களின் ஆலோசனையின்படி இவரை தெருவில் மண்ணில் போட்டு, இவன் எங்கள் குழந்தை இல்லை. இவன் ஊரார் பிள்ளை என்று கூறி வளர்த்து வந்தனர். பிறந்த அன்றே உலகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட மகான் நமது சித்தர் சுவாமிகள்.

மதிவாணன் என்று பெயர் சூட்டப்பட்ட சுவாமிகள் பண்ருட்டி நகரத்தில் பள்ளிப் படிப்பை முடித்து, மதுரை மருத்து வக்கல்லூரியில் மருத்துவம் படித்து மருத்துவரானார். பின்பு வெளிநாட்டில் மருத்் துவ மேல்படிப்பு முடித்து பட்டம் பெற்று தாய் நாடு திரும்பினார்.

தமிழ்நாட்டில், ஆலடி கிராமம், மோழிய னூர், சின்ன செவலை, சுனிமேடு, பிரம்ம தேசம், கடப்பா, ஆகிய ஊர்களில் மருத் துவமனை நிறுவி மக்களுக்கு மருத்துவம் பார்த்தார். மதிவாணன் பருவ வயதை எட்டியதும் இல்லற துணைவியாக வசந்தி என்ற மங்கையை ஏற்றுக்கொண்டார். சுவாமிகளுக்கு, மணிகண்டன், சத்திய சொரூபன் என்ற இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர்.

சிறு வயதில் இருந்தே சித்தர் வழிபாட்டில் சிறந்து விளங்கிய சுவாமிகள், தான் அடிக்கடி சென்று தவமியற்றும் வீரசிங்ககுப்பத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் 27.08.1987அன்று தன் உறவினர்கள் அனைவரையும் அழைத்து, அவர்கள் முன்னிலையில் தான் படித்துப் பெற்ற மருத்துவ சான்றிதழ்களையும், பட்டங்களையும் நெருப்பில் இட்டு எரித்து விட்டு, நான் இன்றுமுதல் சன்னியாச வாழக்கையை ஏற்கின்றேன் என்று கூறி துறவு மேற்கொண்டார்.

அன்றில் இருந்து பதினைந்து ஆண்டுகள் மௌனம் கடைபிடித்து தவ



வாழ்வு வாழ்ந்து வந்தார். அதன் பின் பக்தர்கள் அவரை மௌனசாது பால ஞான சுவாமிகள் என்று அழைத்து வந்தனர்.

சுவாமிகள், தேங்காய், வாழைப்பழம், களிமண் ஆகியவற்றையே ஆகாரமாக உண்டு வாழ்ந்தார். ஆடம்பர உடைகளை அணிவதை தவிர்த்து கோணியில்(சாக்கு) கோவணம் மட்டுமே அணிந்து வாழ்ந்தார். சுவாமிகள் சித்தர்களின் வழிபாட்டால் இயற்கையின் சூட்சுமங்களை அறிந்து, தான் கற்ற ஆங்கில மருத்துவத்தை கைவிட்டு விட்டு, இயற்கை மருத்துவத்துவத்தின் மூலம் மக்களுக்கு சேவை செய்து மக்களுக்கு ஏற்பட்ட தீராத வியாதிகளை தீர்த்து வந்தார்.

சுவாமிகளின் வழியில், இன்றும் அவரது இளைய மகன் திரு. சத்திய சொரூபன் இயற்கை மருத்துவத்தின் மூலம் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார்.

சுவாமிகள் ஏழை மக்களிடம் மிகவும் இரக்கம் காட்டி வந்தார். ஆதரவற்ற ஏழை மக்களுக்காகவும், மாற்றுத் திற னாளிகளுக்காகவும், கல்விச்சாலை அமைத்து கல்விப் பசியைப் போக்கினார்.



சுவாமிகள் தன் வாழ்நாளில் கடைசிவரை பணத்தை கையால் தொட்டதே இல்லை.

ஆன்மீகத்தில் மூட நம்பிக்கைகளை அறவே வெறுத்தார். அதை தன் பக்தர்களுக்கும் போதித்தார். தாய் மொழியாகிய தமிழ் மீது சுவாமிகள் அதிக பற்றுள்ளவர். மக்களுக்குத் தேவையான ஆன்மீக குறிப்புகளை நாட்குறிப்புகளாக தொடர்ந்து எழுதி வந்துள்ளார்.

தன்னை நாடிவந்த பக்தர்களுக்கு அவர்களுக்கு தேவையானவற்றை செய்து சித்த நிலையில் வாழ்ந்த வந்த சுவாமிகள், 2003 ஆம் வருடம் சனவரி மாதம் 9 ஆம் தேதி (மார்கழி 25) சப்தமி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று சமாதி நிலையை அடைந்தார்.

நம்மை செம்மைபடுத்துவதற்கென்றே தோன்றிய சித்தர்களின் சீவ சமாதியை தேடிச்சென்று வழிபட்டு நம் கர்ம வினையை குறைத்துக்கொள்வோம் வாருங்கள்.

ஆலய முகவரி:

அருள்மிகு, மௌனசாது பாலஞான சுவாமிகள் சீவ பீடம், உலக கடவுள் இயற்கையின் அமைதி நல்வாழ்வு ஆஸ்ரமம், இயற்கை மருத்துவமனை, சின்ன நெற்குணம் (கிழக்கு), கூட்டேரிப்பட்டு (வழி), திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் – 604302

பேரூந்து தடம்: சென்னை கோயம்பேடு திண்டிவனம், இறங்குமிடம்: கூட்டேரிப்பட்டு.

இரயில் மார்க்கம்: சென்னை திருச்சி இறங்குமிடம்: திண்டிவனம் கூட்டேரிப்பட்டு.

– (தொடரும்)

கவலை வேண்டாம்!

யாரேனும் ஒருவர் தன்னை பாபாவின் குழந்தையாக பாவித்து பாபாவிடம் வேண்டிய அளவு சரணடைந்து, அந்த சரணாகதியை முழுமையானதாகச் செய்துகொள்ள முயற்சிகள் முழுவதும் எடுத்துக் கொண்டு விட்டால், பாபா அவருடைய எல்லா சுமைகளையும் ஏற்க முன் வந்து, அந்த பக்தரை உண்மையிலேயே தனது குழந்தையாக ஆக்கி கொள்கிறார். அதாவது அவனுடைய பொறுப்புகள் அனைத்தையும் பாபாவே ஏற்றுக் கொள்கிறார்.

பாபாவே கூறியுள்ளபடி,"ஒருவன் காண்பது என்னை, என்னை மட்டுமே, எனினும், என்னைப் பற்றிய பேச்சுக்களையே செவிமடுப்பினும், என்னிடம் மட்டும் பக்தி கொள்வானாயினும், ஒருவன் முழுமனதுடன் என்னை நாடி, என்னிடமே நிலைத்திருப்பின், அவன் உடல் ஆன்மா இரண்டைப் பற்றியும் எந்த வித கவலையும் கொள்ள தேவையில்லை".

சகுண் மேறு நாயக்

ஒரு ஆடு மேய்க்கும் வாலிபர். அதே சமயம் பண வசதியும் உடையவன். தன் சொத்துக்களை எல்லாம் துறந்து விட்டு சீரடியிலேயே தங்கினார். பாபாவின் உத்தரவுப்படி ஒரு உணவு விடுதியை நடத்தி வந்தார். அதுவும் மசூதிக்கு எதிர்ப்புறமே அந்த கடை அமைந்திருந்தது. தனது 85 ம் வயது வரை 1974ம் ஆண்டு வரை சேவை செய்து வந்தார். பாபாவின் அபரிமிதமான சக்திகளை நேரில் காணும் பாக்கியம் சகுண் மேறு நாயக்கிற்கு இருந்தது.



19.11.12ம் ஆண்டு ஹைதராபாத்திலிருந்து தன் நண்பர் ஒருவருடன் சீரடிக்கு வந்தார். அந்த நண்பரின் பெண் போலியோ நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். மூன்றே நாட்களில் உதியின் உதவியுடனும், தன் பார்வையாலும் அந்தப் பெண்ணை முழுவதுமாக குணப்படுத்தி எல்லோரையும் போல் நடமாட வைத்தார் பாபா. இது சகுண் மேறு நாயக் நேரில் கண்ட முதல் லீலை. இதுபோல் எண்ணற்ற லீலைகளை நேரில் பார்த்திருக்கிறார்.

பாபா மகாசமாதியடைந்த பிறகும் அநேக வருடங்கள் சீரடியிலேயே தங்கி இருந்தார். தினமும் பாபாவிற்கு சமாதி மந்திரில் நெய்யுடன் கூடிய உணவை நெய்வேத்தியமாக சிறிது காலம் படைத்து வந்தார். நீண்ட காலம் பக்தர்களுக்கு தபாலில் உதிப் பிரசாதமும், பிரசாதமும் அனுப்பும் பணியை செய்து வந்தார் சகுண் மேறு நாயக்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு. ஹித்தேஷ். சென்னை. ரூ.1001.
திருமதி.அனுராதா சுப்பிரமணியம். பாண்டிச்சேரி. ரூ.1001.
திரு.சதீஷ்குமார் மகாலிங்கம்.ரூ.1000.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி.திலகவதி அன்பு. கோவை. ரூ.500
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.

திருமதி.சுமதி வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.
செல்வி. சௌமியா. ஊட்டி. ரூ.500.
செல்வி.ஆர்.யுவஸ்ரீ, ஓட்டேரி.சென்னை. ரூ.500.
திருமதி.மீரா வெங்கடேசன். சென்னை. ரூ.500.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம்.ரூ.500.
திருமதி. சரஸ்வதி கமலக்கண்ணன். வேப்பம்பட்டு. ரூ.500.
திருமதி.ஜெயசாந்தி.AYK.ரூ.500.
திருமதி. பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.எஸ்.இரங்கநாயகி. நாகை. ரூ.400
திருமதி.துளசி - குடும்பத்தார். அயனாவரம். ரூ.300
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.300.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திருமதி.ஜெயதேனிஷா, ரகுபதிராஜா. கொளத்தூர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.L.I.C ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.சாந்தா அம்மா. மூலக்கடை. ரூ.160
திருமதி.பத்மா. AYK. ரூ.200.
திருமதி. உமா முருகன் சின்னாளப்பட்டி. ரூ.100.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.
திருமதி.பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
வர்ஷினி, கொளத்தூர். ரூ. 50
திரு.ராமகிருஷ்ணன், கொளத்தூர். ரூ.50



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி.திலகவதி அன்பு. கோவை. ரூ.500
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.500.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068